493



# திரு.வி.க.
# தமிழ் வாசகம்

நான்காம் வகுப்பு

ஆசிரியர் :

பி. வீரராகவன்,

(ஆசிரியர் : 'ஆரம்பக்கல்வி')

OFFICE OF THE REGISTRAR OF
22 NOV 1957
M



...ரியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

TB
031(4)
N57
89929

திரு. வி. க.

# தமிழ் வாசகம்

(நான்காம் புத்தகம்)

OFFICE OF THE REGISTRAR OF ...
22 NOV 1957
MADRAS

ஆசிரியர் :

பி. வீரராகவன்

(ஆசிரியர் : 'ஆரம்பக்கல்வி,' சென்னை.)

*(Paper used: 34 lbs. Double Demmy White Printing.)*

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1

பதிப்புரிமை] 1957 [விலை அணு 9

(56 ந. பை.

முதற் பதிப்பு—1957

## முன்னுரை

---

இந்த வாசகம் 1941-ஆம் ஆண்டின் பாட அமைப்பின் படி எழுதப்பட்டிருக்கிறது.

பாடத் திட்டத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையின்படி இதில் புதிய சொற்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வகுப்புக்கு ஏற்ற பாடங்களே ஏற்ற நடையில் எழுதப்பட்டிருக்கின்றன.

பாட அமைப்பில் சொல்லியபடி, பயிற்சிகளும் எளிய இலக்கணக் குறிப்புகளும் எழுதப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்கள், இதில் கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகளை மாதிரியாகக் கொண்டு, வேண்டுமானால், இன்னும் பல பயிற்சிகளைப் பிள்ளைகளுக்குத் தரலாம்.

பிள்ளைகளுக்குப் பாடங்களில் விருப்பம் ஏற்படுமாறு படங்கள் பல இடங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. எளிய பாட்டுகளும் இடை இடையே அமைக்கப்பட்டிருக்கின்றன.

இப்புத்தகம் இவ்வகுப்பிற்குரிய குழந்தைகளுக்கு மிகவும் நலம் தருமென்பது என் நம்பிக்கை.

சென்னை,
16-10-'57 } ஆசிரியர்.

ஆவணக்காப்பக நூலகம்
89929.
சென்னை-600 008.
IB
031(4)
N57

(நான்காம் புத்தகம்)

## பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழ் நாடு ... | 1 |
| 2. | மதுரை ... | 5 |
| 3. | கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ... | 10 |
| 4. | வீரத்தாய் ... | 14 |
| 5. | மலர்கள் (பாட்டு) ... | 19 |
| 6. | இரட்டைப் புலவர்கள் ... | 20 |
| 7. | நீராவி ... | 25 |
| 8. | நானிலம் ... | 29 |
| 9. | தீக்குச்சி ... | 32 |
| 10. | என் பெயர் (பாட்டு) ... | 38 |
| 11. | பாரதியார் ... | 39 |
| 12. | லூயி பாஸ்டர் ... | 44 |
| 13. | சோப்புச் செய்தல் ... | 49 |
| 14. | மறைந்த நகரம் ... | 54 |
| 15. | விளையாட்டுப் பந்தயங்கள் ... | 58 |
| 16. | உயிர்த் தோழர்கள் ... | 63 |
| 17. | அண்ணல் காந்தி ... | 68 |
| 18. | மொத்தம் எத்தனை ? (பாட்டு) ... | 72 |
| 19. | கடிதங்கள்—1 ... | 73 |
| 20. | கடிதங்கள்—2 ... | 75 |
| 21. | பிக்மிக்கள் ... | 79 |
| 22. | மூக்கைத் தூக்கிய காக்கை (பாட்டு) ... | 83 |
| 23. | நத்தை ... | 84 |
| 24. | முகம்மதிய மன்னரும் மதியுள்ள காஜியும் ... | 88 |
| 25. | செய்யுட் பகுதி ... | 94 |
| | செய்யுட்பாடங்கள்—குறிப்புரை ... | 99 |



*(Paper used : Double Demmy 34 lbs. White Printing.)*

*Price : 56 N. P.*

## நாட்டு வணக்கம்

---

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே

காயே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே!

---

## தேசீய கீதம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாபையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது ;
யமுனை கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது ;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப்
பாடுகின்றன;

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி ! வெற்றி ! வெற்றி !

(நான்காம் புத்தகம்)

# 1. தமிழ் நாடு

1. தமிழர்களுடைய தாய் நாடு **தமிழகம்** எனப்படும். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களே தமிழர்கள். ஒரு காலத்தில் பாரத நாடு முழுவதும் தமிழே வழங்கி வந்ததென்று சிலர் கருதுகின்றனர். வட இந்தியாவின் பல பாகங்களில் இன்றும் சிற்சில பிரிவினர் தமிழ் உச்சரிப்பைப் போன்ற உச்சரிப்பைக்கொண்ட சில மொழிகளைப் பேசுகின்றனர்.

2. நாளடைவில், தமிழர் மெல்ல மெல்ல வட இந்தியாவை விட்டு விலகினர். கடைசியாக அவர்கள் தங்கள் நாட்டின் எல்லைகளாக வடக்கே திருவேங்கட மலையையும், தெற்கே குமரியையும், கிழக்கே வங்காள விரிகுடாவையும், மேற்கே அரபிக் கடலையும் கொண்டார்கள்.

3. இந்த நான்கு எல்லைகளுக்கு உட்பட்ட பழைய தமிழ்நாடு பிற்காலத்தில் பின்னும் சுருங்கியது. பல நூற்றுண்டுகளுக்கு முன்பு, தெற்கிலும், கிழக்கிலும், நிலப் பகுதியை நோக்கிக் கடல் நெருங்கிக்

கொண்டே வந்தது. அதனால் தென் எல்லையும், கீழ் எல்லையும் சுருங்கலாயின. தென் சுருக்கத்திற் குமரி-யும், அதைச் சார்ந்த நாட்டின் பகுதியும் மறைந்தன. அவ்வாறு மறைந்த பகுதியில் வழங்கிய பல சிறந்த தமிழ் நூல்களும், இருந்த பட்டினங்களும், ஊர்-களும் அழிந்தன என்று புலவர்கள் கருதுகின்றார்கள்.

4. தமிழ் நாடு பல நூற்றாண்டுகளாக மூவேந்-தர்களால் ஆளப்பட்டு வந்தது. அவர்கள் சேர வேந்தர்கள், சோழ வேந்தர்கள், பாண்டிய வேந்தர்-கள் என்பவர்கள். அவர்கள் ஆண்ட தமிழ் நாட்டின் பகுதிகள் **சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு** என்று சொல்லப்படும்.

5. தமிழ் நாடு மிகுந்த வளம் பொருந்திய நாடு. அதில் சிறந்த யாறுகள் ஓடுகின்றன. அவை **காவிரி, வைகை, தாமிரபரணி** ஆகியவை. அவற்றுள் சிறந்தது காவிரி யாறு. இந்த யாறுகள் நில வளத்திற்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி இடங்களிலிருந்-தும், இடைப்பட்ட இடங்களிலிருந்தும் திரட்டிக் கொண்டு ஓடுகின்றன. இவைகளின் பாய்ச்சலினால் விளையும் நிலப்பகுதிகள் மிகவும் சிறந்தவை.

6. தமிழ் மொழி சிறப்புள்ளது. அது சிறந்த இலக்கியங்களையும், இலக்கணங்களையும் கொண்டது. உலகத்தில் உள்ள பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு, இன்று பல நாட்டினரால் கற்கப்-படும் நூலாகிய **திருக்குறள்** என்பது தமிழ் மொழியில் செய்யப்பட்ட ஒரு சிறந்த நீதி நூலாகும்.

7. தமிழ் மக்கள் நாகரிகத்தில் மிகச் சிறந்த-வர்கள். அவர்கள் தங்கள் நாட்டைவிட்டுக் கடலைக்

கடந்து, பிற நாடுகளுக்குச் சென்று குடியேறி வியாபாரம் செய்தார்கள். இன்றும், இந்தியாவுக்கு அருகிலுள்ள பல தீவுகளிலும், ஆப்பிரிக்காவிலும் தமிழ் மக்கள் வசிக்கின்றார்கள்.

### 1. புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| தாய்நாடு | அறிஞர் | தீவு | நீதிநூல் |
| தமிழகம் | கருது | சுருக்கம் | இலக்கியம் |
| குடியேறி | பிறநாடு | பகுதி | நாகரிகம் |
| சிற்சில | உட்பட்ட | ஆளப்பட்டு | பட்டினம் |
| மொழிகள் | சுருங்கி | நிலவளம் | பல்வேறு |

### 2. கேள்விகள் :

1. தமிழ் நாட்டின் எல்லைகளைப் பற்றி எழுது.
2. ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் தமிழ் வழங்கிய நாடாக இருந்தது. இது எதனால் தெரிகிறது ?
3. தமிழ் நாட்டின் அளவு ஏன் சுருங்கியது ?
4. தமிழ் மொழியைப்பற்றி இரண்டு வாக்கியங்கள் எழுது.

### 3. பயிற்சி :

(1) **பையன் நேற்று வந்தான்.**
**பையன் இன்று வருகிறான்.**
**பையன் நாளை வருவான்.**

இவை மூன்றும் வாக்கியங்கள். இவற்றில் **வந்தான், வருகிறான், வருவான்** என்பன மூன்றும் **வினைச்சொற்கள். வருகிறான்** என்பது **நிகழ்கால வினைச்சொல்.** ஏனெனில், இப்பொழுது நடக்கிற காலத்தில் பையன் வருகிறான். **வந்தான்** என்பது **இறந்தகால வினைச்சொல்.** ஏனெனில், பையன் முன் சென்ற காலத்தில் வந்தான். **வருவான்** என்பது இனி வருங் காலத்தில் வருவான் என்பதைத் தெரிவிக்கிறது. **நிகழ்காலம்** என்றால், இப்பொழுது நடக்கும் காலம் என்று பொருள். **இறந்தகாலம்** என்றால் முன் சென்றுவிட்ட காலம் என்று

பொருள். **எதிர்காலம்** என்ருல் இனிவருங் காலம் என்று பொருள்.

**(2) கீழ்வரும் ஒவ்வொரு வினைச் சொல்லுக்கும் மற்ற இரண்டு கால வினைச் சொற்களை எழுது :**

| | |
|---|---|
| 1. கொண்டார்கள் | 5. நடப்பான் |
| 2. வழங்கினுன் | 6. பிழிகிருன் |
| 3. காப்பாற்றுகிருன் | 7. தேடினுன் |
| 4. புசிப்பான் | 8. செய்வான் |

**(3) நிலவளம், ஒழுக்கம், இலக்கியம், நூற்ருண்டு, திரட்டிக் கொண்டு, அறிஞர்கள், நிலப்பகுதி**–ஒவ்வொரு சொல்லை-யும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.

**(4) கீழ்வரும் ஒவ்வொரு சொல் தொகுதியையும் வாக்கிய-மாக அமைத்து எழுது :**

1. சிறந்த யாறுகள் ஓடுகின்றன அதில்.
2. சிறந்த நூல் ஆகும் திருக்குறள்.
3. யாறுகளின் பாய்ச்சலினுல் மிகவும் சிறந்தன அந்த நிலப் பகுதிகள்.

**(5) நாடு, மொழி, முன்பு, வேந்தர், யாறு**—ஒவ்வொரு சொல்-லுக்கும் அதே பொருளுடைய வேறு ஒரு சொல் எழுது.

---

## 2. மதுரை

1. தமிழ் நாட்டிலுள்ள முதன்மையான நகரங்களுள் மதுரையும் ஒன்று. இது முற்காலத்தில் பாண்டிய நாட்டின் தலைநகராய் இருந்தது. இதில், அக்காலத்தில் பாண்டிய மன்னர்களால் ஆதரிக்கப்பட்ட தமிழ்ச்சங்கம் விளங்கி இருந்தது.

2. இந்நகரம் எக்காலத்தில் தோன்றியது என்றும், யாரால் நிர்மாணிக்கப்பட்டது என்றும் கூற முடியாது. ஆனால், சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் வட இந்தியாவில் ஆட்சி புரிந்த அசோகர் காலத்திலேயே இந்நகரம் இருந்தது என்று சரித்திரம் கூறுகிறது. இந்நகரத்தைப் பற்றி வழங்கும் புராணக் கதை பின் வருமாறு: இது **குலசேகர பாண்டியன்** காலத்தில்தான் அமைக்கப்பட்டது என்று புராணம் கூறுகிறது. அவனுடைய பழைய தலைநகர் **மணவூர்** என்பது. அம்மன்னனுக்கு மணவூரைவிடச் சிறந்த ஒரு தலை நகரம் அமைக்க வேண்டுமென்ற கருத்து உண்டாயிற்று. அத்தகைய தலைநகரை அமைப்பதற்கு ஏற்ற இடத்தைத் தெரிதுங்கொள்ள அவன் பல ஆண்டுகள் முயன்றான்; முயன்றபோது **கடம்ப வனம்** என்ற ஒரு காடு அவன் கருத்துக்கு ஏற்றதாய் இருந்தது. உடனே அதை அழித்து, அவ்விடத்தில் தன் புதிய தலைநகரை உண்டாக்க ஏற்பாடு செய்தான். அந்தத் தலைநகரமே இப்பொழுதும் சிறப்புடன் விளங்கும் **மதுரை மா**நகரமாகும்.

3. குலசேகர பாண்டியனால் உண்டாக்கப்பட்டுப் பின்வந்த பாண்டிய வேந்தர்களால் பெரிதாக்கப்பட்ட மதுரை மாநகரம், அப்பாண்டியர்களுக்குப் பிறகு

ஆட்சி புரிந்து வந்த நாயக்க அரசர்களால் மேலும் பல வகையில் வளர்ந்து சிறப்புற்றது. நாயக்க அரசர்-களுள் சிறந்தவர் **திருமலை நாயக்கர்**. அவர் திருச்-



மீனாட்சியம்மன் கோயில் கோபுரம்

சிராப்பள்ளியில் அமர்ந்து ஆட்சி நடத்தி வந்தார். ஒரு சமயம் அவர் கொடிய நோயினால் பீடிக்கப்பட்டார். நோயுடன் இருந்த காலத்தில் அவர் ஒருமுறை மதுரைத் திருவிழாவுக்குச் சென்றார். அவ்விடத்தில் நோய் அவரை விட்டு அகன்றது. அதனால் பெரிதும் மகிழ்ச்சி அடைந்த திருமலை நாயக்கர், மதுரையின்மீது பற்று வைத்து, அதனைத் தம் தலை நகராய்க் கொண்-டார். பிறகு பல கட்டடங்களைக் கட்டினார். அவற்-

றுள் சிறந்தவை **புது மண்டபமும், இராய மண்டபமும்** ஆகும். அன்றியும், தம் பெயரை மதுரை வாசிகள் என்றும் நினைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு **‘திருமலை நாயக்கர் மகால்’** என்ற கட்டடத்தையும் கட்டினர்.

4. இந்த மகாலில்தான் திருமலை நாயக்கர் வசித்து வந்தார். இது இரும்பும் மரமும் ஒரு சிறிதும் கலவாமல், முழுதும் சுண்ணும்பினுலும் செங்கற்க-ளாலுமே கட்டப்பட்டது. இதன் மேல் பாகம் முழுதும் வேலைப்பாடுகள் அமைந்த வளைவுகள் நிறைந்தது. இந்த வளைவுகளைத் தாங்கி நிற்கும் தூண்கள், ஒவ்வொன்றும் நாற்பது அடி உயரமும், பதினைந்து அடி சுற்றளவும் உள்ளது. இந்த மகா-லில் சலவைக் கற்களால் அமைக்கப்பட்ட சில மண்டபங்கள் இருக்கின்றன. நாகரிகம் மிக்க இந்தக் காலத்திலும் இந்த மகால் ஒரு சிறந்த கட்டட-மாகவே கருதப்படுகிறது.

5. மதுரைமா நகரத்திற்குக் கிழக்கே ஒரு தெப்-பக்குளம் உண்டு. அதற்கு **வண்டியூர்த் தெப்பக்குளம்** என்பது பெயர். வண்டியூர் என்னும் சிற்றூருக்குப் பக்கத்தில் இருப்பதால், அந்தத் தெப்பக்குளத்திற்கு அப்பெயர் ஏற்பட்டது. அக்குளம் சதுர வடிவ-முள்ளது. அதன் சுற்றளவு சற்றேறக்குறைய ஒரு மைல் இருக்கும் என்று மதிக்கப்படுகிறது. அதன் மத்தியில் ஒரு நீராழி மண்டபம் உண்டு. அம்மண்-டபத்தில் தென்னை, மா, பலா முதலிய மரங்கள் நெருங்கிய ஒரு சோலை உண்டு. அதனுடன் ஒரு சிறு கோயிலும் உண்டு. அக்குளத்தையும் திருமலை நாயக்கரே வெட்டுவித்தார்.

6. திருமலை நாயக்கர் மதுரையில் அரசாண்டிருந்த காலத்தில் ஆண்டுதோறும் கோடை மாதங்களில் சுகவாசம் செய்ய, வைகை யாற்றின் வடகரையில் ஒரு கட்டடத்தை அமைத்துக் கொண்டார். அதன் பெயர் **தமுக்கம்** என்பது. அந்தக் கட்டடத்தில் அந்த நாயக்க மன்னர் ஒரு மிருக காட்சிச் சாலை அமைத்திருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

7. அந்நிய தேசங்களிலிருந்து இந்தியாவின் சிறப்பைக் கண்டு களிக்க வரும் மக்கள் மதுரையைக் காணுமல் போகார்.

**1. புதிய சொற்கள் :**

| | | |
|---|---|---|
| பேசத்தக்க | மேம்பட்டது | சுற்றளவு |
| தலைநகர் | திருவிழா | சலவைக்கல் |
| சங்கத்தார் | அகன்றது | தெப்பக்குளம் |
| ஏற்றவகை | சிறந்தன | சிற்றூர் |
| போற்றி | மண்டபம் | ஏறக்குறைய |
| சிறப்புற்று | மகால் | சோலை |
| முயன்முன் | கலவாமல் | கோடை |
| ஏற்றது | வேலைப்பாடு | அன்னிய |

**2. கேள்விகள் :**

1. கடம்பவனம் யாரால் மதுரையாக மாற்றப்பட்டது?
2. மதுரை உண்டான விதத்தை எழுது.
3. திருமலை நாயக்கர் மதுரையை ஏன் விரும்பினர்?
4. திருமலை நாயக்கர் மதுரையை எவ்வாறு சிறப்பித்தார்?
5. திருமலை நாயக்கர் மகாலைப் பற்றி நீ அறிந்ததை எழுது.
6. வண்டியூர்த் தெப்பக்குளத்தைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

### 3. பயிற்சி :

**(1) ஒவ்வொன்றுக்கும் எதிர்ப்பதம் கூறு :**

காடு, வடகரை, உண்டாக்க, பின்னே, இல்லே, மெதுவாக.

**(2) பிரித்து எழுது :**

தெப்பக்குளம், சிற்றூர், அரசாண்டிருந்த, சுகவாசம், சுற்றளவு.

**(3) திருத்தி எழுது :**

1. பாண்டியர்களுக்குப் பிறகு ஆட்சிபுரிகிறவர்கள் நாயக்க அரசர்கள்.

2. திருமலே நாயக்கர் மதுரையைத் தலேநகராகக் கொள் வார்கள் ?

3. திருமலே நாயக்கர் மகால் சிறிதும் மரம் கலவாமல் கட்டப்படும்.

---

# 3. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

"தோட்டத்தில் மேயுது
வெள்ளைப் பசு — அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக் குட்டி."

"பொங்கல்! இன்று பொங்கல்!
புதுவருஷப் பொங்கல்!
மங்கலங்கள் பொங்க
மனையிலிடும் பொங்கல்."

"பாட்டியின் வீட்டுப் பழம்பானை — அந்தப்
பானை ஒருபுறம் ஓட்டையடா!
ஓட்டை வழியொரு சுண்டெலியும் — அதன்
உள்ளே புகுந்துநெல் தின்றதடா!"

1. இந்த அடிகளைப் பாடிப் பார். இவை எவ்வளவு எளிமையாகவும், இனிமையாகவும் இருக்கின்றன என்பதைக் கவனி. இவ்வளவு இனிய பாட்டுக்களை இயற்றியவர் யார் என அறிய நீ விரும்புகிறாய் அல்லவா? இப் பாட்டுக்களையும், இவை போன்ற அநேக பாட்டுக்களையும் உன்னைப்போன்ற இளைஞர்க்காக இயற்றிய பெரியார் **கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை** யாவர். அவர் வாழ்க்கையைப்பற்றி இப் பாடத்தில் படிக்கலாம் :



கவிமணி

2. தமிழகத்தின் தென்கோடியில் உள்ள சுசீந்திரம் என்னும் சிவ தலத்தின் அருகில் **தேரூர்** என்னும் சிற்றூர் இருக்கிறது. அங்குதான் கவிமணி 1876–ஆம் ஆண்டில் பிறந்தார். அவர் தந்தையார் **சிவதாணு பிள்ளை** என்பவர். தாயார் பெயர் **ஆதிலட்சுமி அம்மையார்** என்பதாகும்.

3. கவிமணி தக்க வயது வந்தபோது தேரூரில் இருந்த ஓர் ஆரம்பப் பள்ளியில் சேர்ந்து தமிழும் மலையாளமும் கற்றார். பிறகு கோட்டாறு என்னும் ஊருக்குச் சென்று அங்கு இருந்த உயர்நிலைப் பள்ளியில் மெற்றிகுலேஷன் பரீட்சையில் தேறினர். அதன் பின்னர் அவர் ஆசிரியர் தொழிலுக்கு உரிய பயிற்சியும் பெற்றார்.

4. கவிமணிக்கு இளமையிலேயே கவி பாடுவதில் ஆசை இருந்துவந்தது. அவர் அவ்வப்போது கவிகள் பாடித் தம் நண்பர்களுக்குக் காட்டுவார். ஒருநாள் அவருக்குத் தம் கவியைப் பெரியோர்கள் எப்படி மதிக்கிறார்கள் என்பதை அறிய ஆவல் ஏற்பட்டது. அவர் தாம் இயற்றிய ஒரு கவியைத் தாளில் எழுதித் தமது வகுப்பில் ஆசிரியர் வரும் வழியில் போட்டு வைத்தார். அவர் எதிர்பார்த்தபடியே வகுப்புக்கு வந்த தமிழ் ஆசிரியர் கண்ணில் அது பட்டது. அவர் அதை எடுத்துப் படித்துப் பார்த்து, அதைப்பற்றி மாணவர்களிடம் புகழ்ந்து பேசினர். அது கேட்ட கவிமணிக்குக் கவிகள் இயற்றுவதில் ஆர்வம் அதிகமாயிற்று.

5. கவிமணி தமது இருபத்தைந்தாம் வயதில் **உமையம்மை** என்னும் பெண்மணியை மணந்தார்.

அதே ஆண்டில் இவர் கோட்டாற்றில் இருந்த ஓர் ஆரம்பப்பள்ளியில் ஆசிரியரானுர். அதன் பின்னர் இவர் வேறு பல பள்ளிகளில் ஆசிரியராயிருந்தார். இறுதியில் இவர் திருவனந்தபுரம் மகாராசாக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் பதவியைப் பெற்ருர்; தாம் வேலையிலிருந்து ஒய்வு பெறும் வரையில் அப்பதவியிலேயே இருந்தார்.

6. கவிமணி யவர்கள் பல பள்ளிகளில் ஆசிரியத் தொழிலில் இருந்துகொண்டே குழந்தைகளுக்கான எளிய பாட்டுக்களை இயற்றி வந்தார். அவை அநேக பத்திரிகைகளில் வெளி வந்துகொண்டே இருந்தன. ஆனுல் அவை அவருடைய சொந்தப் பெயரில் வெளி வரவில்லை. ஆண்டான் கவிராயன், தேவி, குயில் முதலிய புனைபெயர்களில் வெளி வந்தன. அவற்றுள் அநேகம் ஆங்கிலக் கவிதைகளைத் தழுவி இயற்றப்பட்டன.

7. கவிமணி தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் கட்டுரைகள் பல எழுதியுள்ளார். இவர் தமது காலம் முழுவதையும் தமிழ்ப் பணியிலேயே செலவிட்டார். குழந்தை உள்ளம் படைத்த இவர் குழந்தைகளுக்காகவே வாழ்ந்தார்; குழந்தைகளுக்காகவே பாடினுர். அப் பாடல்களை எல்லாம் நீங்கள் **மலரும் மாலையும்** எனும் நூலில் படித்து நன்மை பெறவேண்டும்.

**1. புதிய சொற்கள் :**

| | | | |
|---|---|---|---|
| எளிமை | பயிற்சி | தாள் | பேராசிரியர் |
| இனிமை | இளமை | இயற்று | பதவி |
| இளைஞர் | மதிப்பு | ஆர்வம் | புனைபெயர் |
| சிவதலம் | கவிதை | கல்லூரி | கட்டுரைகள் |

**2. கேள்விகள் :**

1. கவிமணியின் முழுப் பெயர் என்ன ?
2. அவர் எங்கே பிறந்தார் ?
3. அவருடைய பெற்றோர் யாவர் ?
4. அவர் எந்த வகுப்பு வரை படித்தவர் ?
5. அவர் வகித்த பதவிகளில் சிறந்தது எது ?
6. அவர் இயற்றிய கவிகளை எந்த நூலில் காணலாம் ?

**3. பயிற்சி :**

(1) எதிர்ச் சொற்கள் எழுது :

| | | | |
|---|---|---|---|
| தென்கோடி | × | பெற்றோர் | × |
| அருகில் | × | இளமை | × |
| பிறந்தார் | × | ஆரம்பம் | × |

(2) இப்பாடத்திலிருந்து ஐந்து பெயர் சொற்கள் எடுத்து எழுது.

(3) இப்பாடத்திலிருந்து ஐந்து வினைச் சொற்கள் எழுது.

---

## 4. வீரத்தாய்

1. முன்னொரு காலத்தில் தமிழ் நாட்டில் **பெருங்குடி** என்ற ஓர் ஊர் சிறப்புற்று இருந்தது. அவ்-வூரில் வாழ்ந்துவந்த மக்கள் அனைவரும் மறவர். மறவர், பெரிதும் தன் மதிப்பும், வீர உணர்ச்சியும் உள்ள ஒரு வகுப்பார். அவர்களுள் ஆண்களும் பெண்களும் வாள் ஏந்திப் போர் செய்ய வல்லவர்கள்.

2. இந்த மறவர் பெருங்குடியில், **மந்தி** என்ற ஒரு வீர மாது வசித்து வந்தாள். ஒரு சமயம் பெருங்-குடியின் மீது பகை மன்னன் ஒருவன் படையெடுத்து வந்தான். அவன் பெரிய படையைக் கொண்டவன். அந்தப் படையோடு போர் புரிந்து வெல்லத் தக்க படை பெருங்குடியின் தலைவனுக்கில்லை. ஆகவே, பெருங்குடியின் தலைவன் தன் மக்களுக்கு ஒரு கட்-டளை விடுத்தான். அதன்படி ஒவ்வொரு வீட்டாரும் ஓர் ஆண் மகனைப் போர்க் கோலத்துடன் ஊர்ப் படையில் கலந்துகொள்ளும்படி அனுப்பினர்.

3. அந்தக் கட்டளையின்படி, மந்தியின் வீட்டில் இருந்த அவளுடைய மாமன் படையைத் தாங்கிச் சென்றான். போரில் முதல் நாளிலேயே அவன் கொல்லப்பட்டான். பிறகு, மந்தியின் கணவன் புறப்பட்டுப் போய் ஊர்ப் படையில் கலந்துகொண்-டான். அவன் மிகவும் திறமை வாய்ந்தவன்; வாள் வித்தையில் வல்லவன். அதனால், அவன் வெகு திறமையோடு எதிரியின் காலாட் படையில் புகுந்து, விரைவில் பலரைக் கொன்றான். அவன் வாளின் வேகத்தின் முன் எதிரியின் படைவீரர்களுள் பலரால் நெடுநேரம் எதிர்த்து நிற்க இயலவில்லை. அது கண்ட

எதிர்ப்படையின் குதிரை வீரன் ஒருவன் தன் கை வேலால் அவனைக் குத்திக் கொன்றான்.

4. தன் கணவன் இறந்த செய்தியைக் கேட்ட மந்தி அடங்காக் கோபம் கொண்டாள்; தன் கணவனைக் கொன்ற எதிரியின் படையை அடியோடு அழிக்கவேண்டுமென்று எண்ணினாள்; போருக்குத் தானே போய் விரோதிகளைக் கொல்ல விரும்பினாள்; ஆனால், பெண்மணிகள் படையில் சேருமாறு



அழைக்கப்படவில்லை. எனவே, அவள் தன் ஒரே மகனாகிய **காடனைப்** போருக்கு அனுப்பத் தீர்மானித்தாள். அவனோ வயதில் சிறியவன். இருப்பினும், தன் நாட்டுக்கு ஏற்பட்ட ஆபத்தைத் தனக்கே ஏற்பட்டதாக மந்தி கருதினாள். ஆகையால், தன் மைந்தனின் இளமையைக் கண்டும் பின்வாங்காமல் அவனைப் போருக்கு அனுப்பத் துணிந்தாள்.

5. உடனே, அவள் மகனை அழைத்து அவனுக்குப் புத்தாடை உடுத்தி, கையில் அவன் தந்தையின் கூரிய வாளைக் கொடுத்தாள். கொடுத்து, "மகனே! நீ வீர மறவர் குடியில் பிறந்தவன் ; குடியின் பெருமைக்குக் குறைவு ஏற்படாமல், இந்த வாளை ஏந்திச் சென்று, மாற்றானுக்கு முதுகு காட்டாமல், போர் புரிவாயாக," என்று கூறி வாழ்த்தி அனுப்பினாள்.

6. வயதில் சிறியவனாயினும், வீரத்தில் பெரியவனான காடன் சற்றும் தாமதிக்காமல் சென்று பகைவர் படையில் புகுந்து பெருஞ் சேதம் விளைவித்தான். ஆயினும், நெடுநேரம் அவனால் பொர் செய்ய முடியவில்லை. அவன் தளர்ந்திருந்த சமயத்தில் எதிரிகளுள் ஒருவன் தன் கை வேலால் சிறுவன் மார்பில் ஆழக் குத்திவிட்டான். அதனால் காடன் உயிர் துறந்தான்.

7. தங்கள் ஊர்ச் சிறுவன் வெகு திறமையாகப் போர் புரிந்ததையும், இறுதியில் மடிந்ததையும் கண்ட பெருங்குடி வீரர்களுக்கு உற்சாகமும் கோபமும் ஒருங்கே தோன்றின. எனவே, அவர்கள் பெரிதும் ஆவேசம் கொண்டவர்களாய், உயிரைத் துரும்பாக மதித்து எதிரிகளைச் சிதறடித்து வெற்றி பெற்றார்கள்.

8. போர் முடிந்த பிறகு, வீடு திரும்பிய மறவர்களுள் ஒருவன் மந்தியைக் கண்டு, "உன் மகன் முதுகில் அடிபட்டு இறந்தான்," என்று கூறினான். இதைக் கேட்டதும், அவளுக்குப் பெருங் கோபம் உண்டாயிற்று. "வீரத்துடன், பகைவரைத் தாக்கி மார்பில் குத்துண்டு இறக்காமல், முதுகு காட்டி ஓடும்போது, குத்துண்டு இறப்பதோ வீரம்! அவ்வாறு என் மகன் இறந்திருப்பானேயானால், அவனுக்குப் பாலுடன் வீரத்தை ஊட்டிய என் மார்பை அறுத்து

எறிவேன்,'' என்று கூறிக்கொண்டு, அவள் போர்க்களத்திற்குச் சென்றாள்; அங்கே கிடந்த உடல்களில் தன் மகனுடைய உடலைத் தேடினாள்; நெடுநேரம் முயன்று அவனுடைய உடலைக் கண்டெடுத்தாள். காடன் மார்பில் எதிரியின் வேல் புதைந்தபடி இருந்ததை அவள் கண்டாள்; அதைக் கண்டு பெரிதும் ஆனந்தம் அடைந்தாள். அவள் அன்றோ வீரத்தாய்!

### 1. புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| மறவர் | படையெடுத்து | அடியோடு |
| தன்மதிப்பு | போர்புரிந்து | படைதாங்கி |
| வீர உணர்ச்சி | தலைவன் | புத்தாடை |
| ஏந்தி | போர்க்கோலம் | மாற்றான் |
| வல்லவர் | காலாட்படை | தாமதி |
| வீரமாது | எதிரி | ஆவேசம் |
| பகை மன்னன் | செய்தி | |

### 2. கேள்விகள் :

1. மறவர்கள் எப்படிப்பட்டவர்கள்?
2. பெருங்குடித் தலைவன் இட்ட கட்டளை என்ன?
3. மந்தியின் கணவன் எவ்வாறு கொல்லப்பட்டான்?
4. கணவன் இறந்த பிறகு மந்தி என்ன எண்ணினாள்?
5. காடனுக்கு அவள் தாய் சொன்ன புத்திமதி என்ன?
6. மந்தி ஏன் தன் மகன் உடலைத் தேடினாள்?

### (3) பயிற்சி :

(1) **ஆகையால், ஏனென்றால், எதிரி, இருந்தாலும்**—ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.

(2) **மந்தி காடனை அழைத்தாள்.**

இது ஒரு வாக்கியம். இந்த வாக்கியம் மந்தி செய்த ஒரு வேலையைப்பற்றிச் சொல்லுகிறது. மந்தி என்ன செய்தாள்?

மந்தி அழைத்தாள். இந்த வாக்கியத்தில் மந்தி என்ற பெயர்ச் சொல் **எழுவாய்** ஆகும். **எழுவாய்** என்னும் சொல்லுக்கு எழுவதற்கு இடமாக இருப்பது என்று அர்த்தம். இந்த வாக்கியம் எழுவதற்கு இடமாக இருப்பது மந்தி என்னும் சொல். ஆகையால், மந்தி என்பது எழுவாய் ஆயிற்று. அழைத்தாள் என்னும் வினைச் சொல் **பயனிலை** என்று சொல்லப்படும். ஏனென்றால் எழுவாயின் பயனாக உள்ளது **பயனிலை** ஆகும். மந்தி என்னும் எழுவாய்க்குப் பயனிலை அழைத்தாள் என்பது.

**(3) கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய்களை எடுத்து எழுது:**

1. அவள் மகனை அனுப்பினாள்.
2. காடன் பகைவரைக் கொன்றான்.
3. சிறுவன் போர் செய்தான்.
4. வேல், காடன் மார்பில் பாய்ந்தது.

**(4) கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள பயனிலைகளை எடுத்து எழுது:**

1. மந்தியின் கணவன் போரில் இறந்தான்.
2. அவன் போர் புரியத் துணிந்தான்.
3. அவன் கையில் கூரிய வாளைக் கொடுத்தாள்.
4. தாய் மகனை வாழ்த்தி அனுப்பினாள்.

(5) **ஓடுதல் உடம்புக்கு நல்லது.**

இந்த வாக்கியத்தில் ஓடுதல் என்பது எழுவாய். ஆனால் இது 'பெயர்ச் சொல்லா?' என்று சந்தேகப்படலாம். இது பெயர்ச் சொல்லே. ஓடு, ஓடுகிறான், ஓடுவான், ஓடினான் ஆகிய நான்கும் வினைச் சொற்கள். இருந்தாலும் ஓடுகின்ற **செயலின் பெயர் ஓடுதல்** என்பது. அது பெயராகையால், பெயர்ச் சொல் ஆயிற்று. இந்தப் பெயர்ச் சொல்லுக்கு **தொழிற் பெயர்** என்பது பெயர். ஓடுகிறான் என்பது நடக்கிற ஒரு செயலைக் காட்டுகிறது. ஓடுதல் என்பது பொதுவாக ஒரு தொழிலின் பெயரைக் குறிக்கிறது.

(6) **பேசுவான், நடந்தான், பறக்கின்றது**—இந்த வினைச் சொற்களிலிருந்து உண்டாகும் தொழிற் பெயர்களை எழுது.

---

# 5. மலர்கள்

(பாட்டு)

மண்ணி லிருந்து பொருள் வரினும்—அதை
மாற்றி மணம்பெறச் செய்திடுவோம்;
கண்ணுக் கினிய நிறங்களெல்லாம்—விண்ணில்
காணும் கதிரிடம் பெற்றிடுவோம். 1.

மங்கைய ரோடு குமரரையும்—மனம்
வாய்த்த மணம்செய்து வாழவைப்போம்;
தங்கமும் பொன்னும் மணிகளுமே—எம்மைத்
தாழ்ந்து வணங்கமேல் தங்கிடுவோம். 2.

ஈசன் அடியில் பணிந்திருப்போம்;—அவர்
ஏந்து முடிமீதும் ஏறிநிற்போம்;
பூசனை செய்யும் அடியவரின்—உள்ளம்
பொங்கு களிப்பெல்லாம் காட்டி நிற்போம். 3.

மன்னரும் கண்டெதிர் வந்திடுவர்;—கட்டி
மார்போ டணைத்து மகிழ்ந்திடுவர்;
இந்நிலத் தின்பம் பெருகிடவே—நாங்கள்
என்றும் உயிர்வாழ்ந் திருப்போமம்மா! 4.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

# 6. இரட்டைப் புலவர்கள்

1. சற்று ஏறக்குறைய நானூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர், சோழ நாட்டில் **ஆமிலந்துறை** என்னும் ஊரில், இரட்டைப் புலவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுள் ஒருவர் முடவர்; மற்றவர் குருடர். இருவரும் உறவினர். ஒருவர் அம்மான் மகன்; மற்றவர் அத்தை மகன். இவர்கள் இருவரும் தமிழ் மொழியில் அதிக பாண்டித்தியம் பெற்றவர்கள். இளமையிலேயே இவர்களுக்கு எளிதாகச் செய்யுள் இயற்றும் ஆற்றல் அமைந்திருந்தது.

2. 'உறுப்பில் குறைவு ஏற்பட்ட ஒருவனுக்கு அறிவில் கூர்மை ஏற்படுவதுண்டு' என்பர். ஆகையால் கால் என்னும் உறுப்புக் குறைந்து முடவராகிய புலவருக்கும், கண் என்னும் உறுப்பில் குறைவு ஏற்பட்டுக் குருடராகிய புலவருக்கும் மதிக் கூர்மை ஏற்பட்டது இயல்பே.

3. முற்காலத்தில் வாழ்ந்த பெரும் புலவர்களுள் பெரும்பான்மையோர் வறுமையால் பீடிக்கப்பட்டு வந்தனர். ஏனெனில் கல்வி கற்பதிலும் கற்றவற்றைப் பிறருக்கு எடுத்துச் சொல்லுவதிலும் நிறைந்த ஆர்வம் கொண்ட புலவர்களின் மனம், பிழைப்பைக் கருதி, தொழிலின் மீது செல்வதில்லை. அந்த வறுமை நோய்க்கு நம் இரட்டைப் புலவர்களும் ஆளானார்கள். அவர்கள் அவ்வப்போது பல செல்வர்களிடம் சென்று, தங்கள் கவித் திறமையைக் காட்டிப் பரிசில் பெற்று, வாழ்க்கையை ஒருவாறு நடத்தி வந்தார்கள். முடவரும், குருடருமான அவர்கள் எவ்வாறு இடம்

விட்டு இடம் சென்றார்கள் என்று நீங்கள் வியப்பு அடையலாம். குருட்டுப் புலவரின் தோளின்மீது முடப்புலவர் இருந்துகொண்டு குருட்டுப் புலவருக்கு அவர் போகவேண்டிய வழியைச் சொல்வார். இவ்வாறே இவ்விரு புலவர்களும் பல ஊர்களுக்குச் செல்வது வழக்கம்.

4. இரட்டைப் புலவர்களின் பிறப்பும், பெயரும் இன்னவை யென்று தெரியவில்லை. ஆதலால், அவர்களுக்கு **முதுசூரியர், இளஞ்சூரியர்** என்ற பெயர்கள் வழங்கின என்று தெரிகிறது. தங்கள் சுற்றுப் பிரயாணங்களில் வாய்ப்பு நேர்ந்தபோதெல்லாம், இவர்களுள் ஒருவர் ஒரு செய்யுளின் முதற் பாதியைப் பாடினால், மற்றவர் அவர் கருத்திற்கு மாறுபடாமல் அச்செய்யுளின் மற்றப் பாதியைப் பாடி முடிப்பார். அவ்வாறு பாடப்பட்ட செய்யுள் ஒருவரே பாடியது போலக் காணப்படும்.

5. கல்வியில் சிறந்த இரட்டைப் புலவர்களின் வாழ்க்கையில் நேர்ந்த இரண்டு சம்பவங்களைப் பற்றி நாம் தெரிந்து கொள்வோம்: ஒரு சமயம் இரு சூரியர்களும் மதுரையம்பதியின்கண் உள்ள பொற்றாமரைத் தடாகத்தில் குளிக்கும்படி நேர்ந்தது. முடப்புலவர் கரையில் ஒய்ந்து உட்கார்ந்திருந்தார். அந்தகப் புலவர் படித்துறையில் இறங்கி ஆடையைத் துவைத்தார். அவ்வாறு துவைத்த பின்னர், அதை நன்கு சுத்தப்படுத்தத் தண்ணீரில் விரித்து வீசினார். வீசியபோது அந்த ஆடை கை தப்பி, விலகி, தண்ணீரில் அழுந்தி விட்டது. அதை எடுக்கக் குருடர் கைகளை நீட்டித் தடவித் தடவித் தவித்தார். அது கண்ட முடவர்,

*" அப்பிலே தோய்த்திட் டடுத்தடுத்து நாமதனைத்
தப்பினல் நம்மையது தப்பாதோ?"*

என்று பாடினர். அதைக் கேட்டுக் குருடர்,

*—அப்படியே*

*" ஆனாலும் கந்தை அதிலுமோர் ஆயிரங்கண்
போனல் துயர்போச்சுப் போ,"*

என்று பாடி, பாட்டை முடித்தார்.

6. மற்றொரு சமயம் இரட்டைப் புலவர்கள் மிக்க பசியுடன் **ஆங்கூர்** என்னும் ஊரைச் சென்றடைந்து, அங்கிருந்த கோயிலில் தங்கினர்கள். கோயில் பிரசாதம் பெற்றுப் பசியைப் போக்கிக்கொள்ளலாம் என்று அவர்கள் எண்ணினர்கள். கோயில் பூசைக்கு உரிய வாத்திய ஒலிகள் அதிகரித்து இருந்தனவே ஒழிய அவர்கள் எதிர்பார்த்தவாறு அவர்கட்குச் சோறு சிறிதளவும் கிடைக்கவில்லை. அது கண்ட முடவர், பசியும், ஏமாற்றமும் தம்மை வருத்த,

*" தேங்கு புகழ் ஆங்கூர்ச் சிவனேவல் லாளியப்பா!
நாங்கள் பசித்திருக்க நியாயமோ?"*

என்று பாடினர். உடனே குருடர்

*—" போங்காணும்*

*கூறுசங்கு தோல்முரசு கொட்டோசை யல்லாமல்
சோறுகண்ட மூளியார் சொல்."*

என்று சினத்துடன் பாட்டை முடித்தார். அச்சமயத்தில் அங்கு வந்த கோயில் காவலர் புலவர்களுடைய கவித் திறமையைப் புகழ்ந்து அவர்களைத் தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்று, விருந்து செய்வித்து, வழிகூட்டி அனுப்பினர்.

### 1. புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| உறவினர் | பெரும் பான்மை | எதிர்பார்த்த |
| அம்மான் | | பிரசாதம் |
| பாண்டித்தியம் | ஆர்வம் | சுற்றுப் பிரயாணம் |
| இயற்கை | நாட்டம் | |
| ஆற்றல் | அவ்வப்போது | வாய்ப்பு |
| அனுபவம் | பரிசில் | சம்பவம் |
| குறைபாடு | காவலர் | தடாகம் |
| ஏமாற்றம் | | |

### 2. கேள்விகள் :

1. இரட்டைப் புலவர்களுக்கு அப்பெயர் ஏற்பட்ட காரணம் யாது?

2. இவர்களால் எப்படிப் பிரயாணம் செய்ய முடிந்தது?

3. ஆங்கூரில் நடந்த சம்பவம் என்ன?

4. பழங்காலப் புலவர்கள் ஏன் வறுமையால் வாடினார்கள்?

5. இரட்டைப் புலவர்கள் பாடிய ஒரு பாட்டின் பொருளை எழுது.

### 3. பயிற்சி :

**(1) மனிதன், குதிரை, சுவர்.**

இந்த மூன்றும் பெயர்ச் சொற்கள். மனிதன் பகுத்தறிவுள்ள உயர்ந்த பிறவி. குதிரை உயர்ந்த பிறவி அல்ல. சுவரும் அப்படிப்பட்டதே. உயர்ந்த பிறவியைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள் **உயர்திணைச் சொற்கள்** என்று சொல்லப்படும். மற்றப் பெயர்கள் **அஃறிணைப் பெயர்கள்** என்று சொல்லப்படும். அஃறிணை = அல்லாத திணை; அதாவது உயர்வு அல்லாத திணை.

**(2) கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள உயர்திணைப் பெயர்களையும் அஃறிணைப் பெயர்களையும் எடுத்து எழுது:**

1. முதுசூரியர் என்பவர் ஒரு புலவர்.

2. திமிங்கிலம் கடலில் வாழும் ஜந்து.

3. தென்னை மரம் மனிதனுக்குப் பலவகைகளில் அதிகமாக உபயோகப்படுகிறது.

4. சங்கோசை கோயிலில் கேட்கும்.

5. பிரசாதம் ருசியாக இருக்கும்.

6. மன்னன் நாட்டின் தலைவன்.

7. முதலியார் என்பது பட்டப் பெயர்.

**(3) இந்தப் பாடத்தின் முதல் பத்தியை உன் சொந்த சொற்களில் எழுது.**

---



# 7. நீராவி

1. இங்கிலாந்தின் வடபால் உள்ள **ஸ்காட்லாந்து** தேசத்தில் **கிர்னுக்** என்னும் ஒரு நகரம் உண்டு. அந்த நகரில், பல ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு ஏழைக் குடும்பத்தில் **ஜேம்ஸ்** என்ற ஒரு சிறுவன் பிறந்தான். ஜேம்ஸ் மிகவும் நுட்பமான புத்தி-யுள்ளவன். அவன் இளமையிலேயே எதையும் ஆராய்ச்சி செய்து அறியும் விருப்பமுடையவன். அவ்விருப்பமே அவனைப் பிற்காலத்தில் ஒரு சிறந்த அறிஞனாக்கியது.

2. ஜேம்ஸ் பன்னிரண்டு பிராயமுள்ள சிறுவனாய் இருந்த காலத்தில், ஒரு நாள் அடுப்பின் அருகில் உட்கார்ந்திருந்தான். அப்பொழுது அடுப்பின்மீது இருந்த ஒரு மூக்குப் பாத்திரத்தில் நீர் காய்ந்து கொண்டிருந்தது. அந்த நீர் கொதித்துக்கொண்டு இருந்தது. மூக்கின் வழியாக, நீராவி 'உஸ்' என்ற ஓசையுடன் வேகமாய் வெளிப்பட்டுக் கொண்-

டிருந்தது. அந்த நீராவியின் வேகத்தை ஜேம்ஸ் உன்னிப்பாய்க் கவனித்தான். அந்தச் சமயத்தில் அங்கு அவன் தாய் வந்தாள். அவள் தன் பிள்ளை படிக்காமல், அந்த வேடிக்கையைப் பார்த்துக்-கொண்டு வீணுய்க் காலங் கழிக்கிருன் என்று எண்ணினுள். "இதில் என்ன வேடிக்கை இருக்கிறது; நீர் காய்வதை நீ எப்பொழுதும் பார்த்ததில்லையா? காயும் நீரிலிருந்து நீராவி இவ்வாறு வெளிவருவது புதுமையா?" என்று அவள் அவனைக் கண்டித்தாள். அவள் பேசியது ஒன்றும் ஜேம்ஸின் காதில் நுழைய-வில்லை. அவன் அசையாமல் சித்திரப் பதுமையைப்-போல அந்த நீராவியையே கவனித்துக் கொண்-டிருந்தான்.

3. ஜேம்ஸின் தாய், பிள்ளைகள் வேடிக்கை பார்ப்பது வழக்கந்தான் என்று நினைத்து அவனை மேலும், கண்டிக்காமல் போய்விட்டாள். அவள் சென்ற பிறகு சிறுவன் பாத்திரத்தின் மூக்கை மூடி-விட்டான். அதனுல், மூக்கின் வழியாக வெளிவந்து-கொண்டிருந்த நீராவி அவ்வழியாக வரமுடியாமல் வெந்நீரிலிருந்து மேல் நோக்கி, பாத்திரத்தின் மேல் மூடியை அசைக்க ஆரம்பித்தது. சற்று நேரத்திற்குள் மேல்மூடியை நன்ருக விலக்கிக் கொண்டு, நீராவி தாராளமாக வெளிவரத் தொடங்கியது. அக் காட்சியைக் கண்ட ஜேம்ஸ், நீராவியின் சத்தியை அறிந்து வியப்பு அடைந்தான். நீராவியின் சத்தியை மனிதன் பலவிதமாக உபயோகிக்கலாம் என்று அவன் நன்கு உணர்ந்தான். அப்போது அவனுடைய மனதில் ஏதேதோ காட்சிகள் தோன்றின. கடலில் கப்பல்கள் நீராவியின் சத்தியினுல் செலுத்தப்படுவது போலவும்,

பெரிய வண்டிகள் நீண்ட தூரம் அதே சத்தியினுல் ஓட்டப்படுவது போலவும் அவன் நினைத்தான்.

4. பல ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஓர் ஏழைச் சிறுவனுல், தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்ட நீராவியின் சத்தியினுல், இந்த நாளில் உலகமே பலவகைகளிலும் அளவற்ற நன்மை அடைகின்றதல்லவா! ஜேம்ஸ் கண்ட கனவுகளும், அவன் எண்ணிய எண்ணங்களும், பிற்காலத்தில் உண்மையாகவே நடந்தேறின. இன்று பெருங் கடல்களில் செல்லும் கப்பல்கள் நீராவியின் சத்தியினுல் செலுத்தப்படுகின்றன. நாம் பிரயாணம் செய்யும் இரயில் வண்டிகளும் நீராவியின் ஆற்றலினுல்தான் ஓட்டப்படுகின்றன. அன்றியும் பல தொழிற்சாலைகளில் நீராவியினுல் இயக்கப்படும் பொறிகள் அல்லது இயந்திரங்கள் மனிதனுக்கு வேண்டிய பொருள்களைச் செய்கின்றன.

**1. புதிய சொற்கள் :**

| | | |
|---|---|---|
| நுட்பம் | புதுமை | தற்செயல் |
| ஆராய்ச்சி | பதுமை | நடந்தேறின |
| வடபால் | சித்திரம் | இயக்கம் |
| உன்னிப்பாய் | தாராளம் | கண்டித்தாள் |

**2. கேள்விகள் :**

1. ஜேம்ஸ் எப்படிப்பட்டவன் ?
2. அடுப்பில் ஜேம்ஸ் கண்ட வேடிக்கை என்ன ?
3. நீராவியினுல் ஜேம்ஸ் என்னென்ன செய்யலாமென்று நினைத்தான் ?
4. நீராவியினுல் மனிதனுக்கு உண்டாகும் நன்மைகள் யாவை ?
5. ஜேம்ஸின் குணத்தைப் பற்றி இரண்டு வாக்கியங்கள் எழுது.

3. பயிற்சி :

(1) **மகன், மகள், மக்கள்** என்ற மூன்று சொற்களேயும் கவனி. மகன் என்பது ஒரு ஆணேக் குறிக்கிறது. மகள் என்பது ஒரு பெண்ணேக் குறிக்கிறது. மக்கள் என்பது ஆண்களும் பெண்களும் கலந்துள்ள பலரைக் குறிக்கிறது. ஆகையினுல், மகன் என்பது **ஆண் பால்** பெயர்ச் சொல்; மகள் என்பது **பெண் பால்** பெயர்ச் சொல்; மக்கள் என்பது **பலர் பால்** பெயர்ச் சொல். இவை மூன்றும் மனிதரைக் குறிப்பதால் இவை **உயர்திணே**யைச் சேர்ந்தவை. இவற்றில் மகன் என்பதும் மகள் என்பதும் **ஒருமைச்** சொற்கள். மக்கள் என்பது **பன்மைச்** சொல்.

(2) **சீப்பு, சீப்புக்கள்**—இவற்றில் **சீப்பு** என்னும் வார்த்தை ஒரு சீப்பைக் குறிக்கிறது. **சீப்புக்கள்** என்னும் வார்த்தை பல சீப்புக்களேக் குறிக்கிறது. இவை இரண்டும் **அஃறிணேச்** சொற்கள். இவற்றில் சீப்பு என்பது, **ஒன்றன் பால்** பெயர்ச் சொல் என்றும், சீப்புக்கள் என்பது **பலவின் பால்** பெயர்ச் சொல் என்றும் சொல்லப்படும். அஃறிணேச் சொற்களில் ஒருமையைக் காட்டுவது ஒன்றன் பால்; பன்மையைக் காட்டுவது பலவின் பால்; பால் என்ருல் பிரிவு என்று அர்த்தம். பால் ஐந்து. அவை **ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்.**

(3) **கிணறு, கல், குறத்தி, மறவர், முருகன், ஈக்கள், வேடர்கள்**—ஒவ்வொரு சொல்லுக்குரிய பாலேயும் தனித் தனி எழுது.

## 8. நானிலம்

1. நாம் வசிக்கும் நாட்டின் எல்லாப் பகுதிகளும் ஒரே மாதிரி இல்லை. சில இடங்களில் மலைகளும் குன்றுகளும் பாறைகளும் காணப்படுகின்றன. மற்றும் சில இடங்கள் காடுகளால் மூடப்பட்டுள்ளன. வேறு சில பகுதிகள் சம நிலமாகவும், பயிர் நிலமாகவும் காணப்படுகின்றன. இன்னும் சில இடங்கள் கடற்கரையை அடுத்துக் கழிகளும், சோலைகளும், மணற்பரப்பும் உடையயவையாக இருக்கின்றன. இந்த வேறுபாடுகளை மனத்தில் கொண்டு நம் முன்னோர் நிலத்தை நான்கு பாகுபாடுகளாகக் கொண்டார்கள். அவை **நானிலம்** எனப்படும். அவற்றின் தன்மைகளைச் சிறிது அறியலாம்:

2. மலையும் மலைசார்ந்த இடமும் **குறிஞ்சி** எனப் பெயர் பெறும். குறிஞ்சி மரங்களைப் பெற்றிருப்பதால் குறிஞ்சி என்னும் பெயர் வழங்கலாயிற்று. குறிஞ்சி நில மக்கள் குறவர், குறத்தியர் எனப்படுவார்கள். அவர்கள் மலைகளின்மீது உள்ள சமநிலப் பகுதிகளில் தினையைப் பயிர் செய்வார்கள். மலைப் பாறைகளில் தேன் அடைகள் இருக்கும். அவற்றிலிருந்து தேன் எடுப்பார்கள். இவைதாம் அவர்களின் முக்கியத் தொழில்கள். அவர்கள் முருகனை வணங்குவார்கள். குறிஞ்சி நிலத்தில் யானை, வேங்கைப்புலி, கரடி முதலிய விலங்குகள் காணப்படும்.

3. மலைகளை யடுத்துக் காடுகள் இருக்கும் அல்லவா ? காடும், காடு சார்ந்த இடமும் **முல்லை நிலம்** எனப்படும். இங்கு வாழும் மக்கள் ஆயர், ஆய்ச்சியர் எனப்படுவர். மாடு மேய்ப்பது அவர்க-

ளுடைய முக்கியத் தொழிலாகும். முல்லைக் கொடி-கள் அதிகம் காணப்படுவதால் இந்நிலம் இப்பெயர் பெற்றது. முல்லை நில மக்கள் திருமாலை வணங்கு-வார்கள். மான், முயல் முதலிய விலங்குகள் முல்லை நிலத்துக்கு உரியவையாம்.

4. காடுகளை யடுத்து ஊர்கள் இருக்கும் அல்லவா ? ஊர்களின் புறத்தே பயிர் நிலங்கள் இருக்-கும். ஆதலால் வயலும் வயல் சார்ந்த இடமும் **மருத நிலம்** எனப்படும். இந்நிலத்தில் வாழும் மக்களுக்கு உழவர், உழத்தியர் என்னும் பெயர்கள் வழங்கி வந்தன. வயலை உழுது நெல்லும் கரும்பும் பயிர் செய்வதே அவர்களுடைய முக்கியத் தொழிலாகும். மருதநில மக்கள் மழைக் கடவுளாகிய இந்திரனை வணங்கி வந்தார்கள். மருத மரங்கள் அதிகமிருப்ப-தனுல் இந்நிலம் அப்பெயர் பெற்றது.

5. கடலும் கடல் சார்ந்த இடமும் **நெய்தல் நிலம்** எனப்பட்டது. நெய்தற் பூக்கள் நிறைந்த நீர் நிலைகள் இங்குக் காணப்படும். ஆதலால் இது நெய்தல் என்னும் பெயர் பெற்றது. இங்கு வாழும் மக்கள் பர-தவர், பரத்தியர் எனப்பட்டனர். அவர்களுக்கு மீன் பிடிப்பதும், உப்புத் திரட்டுவதும் முக்கியத் தொழில்-களாகும். இவர்கள் கடல் அரசன் என வழங்கும் வருணனைக் கடவுளாகக் கொண்டார்கள்.

6. மேலே கூறப்பட்ட பாகுபாட்டில் அடங்-காமல், மழையின்றி வறண்டு கிடக்கும் நிலப்பகுதி-களும் ஆங்காங்குக் காணப்படும். அம்மாதிரி நிலத்-துக்குப் **பாலை நிலம்** என்பது பெயர். அங்கு வாழும் மக்கள் கள்வர்கள். அவர்கள் அப்பாலையின் வழியே வரும் மக்களைக் கொள்ளையடித்து வாழ்ந்து வந்தார்-

கள். அவர்கள் காளியைக் கடவுளாக வணங்கி வந்தார்கள்.

7. இந்தப் பாகுபாடுகள் நமது மிகப் பழைய தமிழ் நூல்களில் காணப்படுகின்றன. அவைபற்றிய எத்தனையோ செய்திகள் உண்டு. அவற்றை நீங்கள் மேல் வகுப்புக்களில் படித்தறிதல் வேண்டும்.

### 1. புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| பாறைகள் | பாகுபாடு | முல்லை | இந்திரன் |
| கழிகள் | குறிஞ்சி | ஆயர் | நெய்தல் |
| சோலை | குறவர் | ஆய்ச்சியர் | பரதவர் |
| மணற்பரப்பு | குறத்தியர் | மருதம் | பரத்தியர் |

### 2. கேள்விகள் :

1. நானிலம் என்பவை எவை ?
2. குறிஞ்சிநில மக்கள் யார் ? அவர்களின் தொழிகள் எவை ?
3. முல்லை நில மக்களுக்கு வழங்கிய பெயர்கள் எவை ? அவர்களின் தொழில் யாது ?
4. பயிர்த் தொழில் எந்நிலத்தில் நடைபெறும்? அந்நிலத்திற் குரிய கடவுள் யார் ?
5. நெய்தல் என்னும் பெயர் எக்காரணத்தால் அந்நிலத் துக்கு வந்தது ?
6. நெய்தல் நில மக்களின் தொழில்கள் யாவை ?
7. இந்த நான்கு பாகுபாடுகளுக்குள் அடங்காத நிலம் எது ?

## 9. தீக்குச்சி

1. ஆதிகாலத்தில் மனிதன் உணவுப் பொருள்களைச் சமைக்காமல் புசித்து வந்தான் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். அக்காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில்தான் நெருப்பின் உபயோகத்தை மனிதன் கண்டுபிடித்தான். பிறகு உணவைச் சமைத்துக் கொள்வதற்கும், இருளில் ஒளியுடன் இருப்பதற்கும் தொடங்கினான். முதன் முதலில் சூடு எவ்வாறு உண்டாகிறதென்பதை மனிதன் தற்செயலாகக் கண்டுபிடித்தான். நல்ல வெயிலில் மூங்கில் புதர்களில் தீ உண்டாவதை மனிதன் கண்டான். மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்வதால், சூடு உண்டாகி தீ வெளிப்படுகின்றது என்பதை அவன் தெரிந்துகொண்டான். ஆகையினால் நாளடைவில் அவன் நன்றாக உலர்ந்த கோல்களை எடுத்து ஒன்றுடன் மற்றொன்றைத் தேய்த்துத் தீ உண்டாக்கிக் கொள்ளக் கற்றுக் கொண்டான். இந்தக் கோல்களைத் **தீக்கடை கோல்கள்** என்று சொல்வார்கள். பிறகு கடினமான இரண்டு கற்களை இரு கைகளினாலும் பற்றிக்கொண்டு, ஒன்றன் மீது ஒன்றை மோதி, தீ உண்டாக்கும் விதத்தையும் மனிதன் கற்றுக் கொண்டான். பலவகைப்பட்ட கற்களில், எளிதில் தீயைத் தரும் கற்கள் **சிகிமுகிக் கற்களாகும்.**

2. இவ்வாறு தீ உண்டாக்க அறிந்த காலத்திற்குப் பிறகு மக்கள் வேண்டும் போதெல்லாம் உபயோகப்படும்படி **நெருப்புச் சட்டிகளைத்** தயாரித்து வைத்துக் கொள்ளத் தொடங்கினார்கள். இந்தச் சட்டிகளில் வறட்டி, உமி முதலிய பொருள்களில்



தீக்குச்சி செய்யும் தொழிற்சாலை

தீயை மூட்டி வைத்து, அது சீக்கிரத்தில் அவியாதபடி பார்த்துக்கொள்வார்கள்.

3. நாகரிகம் மிகவும் பரவியுள்ள இக்காலத்தில், நாம் **தீக்குச்சி**களால் நெருப்பை உண்டாக்கிக்கொள்கிறோம். முதன் முதலில் செய்யப்பட்ட தீக்குச்சிகளுக்கும், இந்நாளில் நாம் உபயோகப்படுத்தும் தீக்குச்சிகளுக்கும் வித்தியாசம் உண்டு. முதலில் செய்யப்பட்ட தீக்குச்சிகள் நெருப்பில் காட்டினால்தான் தீப்பிடித்து எரியும். ஆகவே, தீக்குச்சிகளோடு வேறு நெருப்பும் தேவையாய் இருந்தது. சில காலத்திற்குப் பிறகு நெருப்புக்குப் பதிலாக, ஓர் இரசாயனப்பொருள் கண்டு பிடிக்கப்பட்டது. அதில், தீக்குச்சியை வைத்தால் குச்சி எரியும். மக்களுக்கு அந்த முறையும் எளிதாக இல்லை. ஆகவே, இன்னும், பிற்காலத்தில் அந்த இரசாயனப் பொருளைத் தீப்பெட்டியின் இரு பக்கங்களிலும் தடவி வைக்கத் தலைப்பட்டனர். அம்மருந்தின் மேல் குச்சியை அழுத்திக் கீறினால் குச்சி தீப்பற்றி எரியும். எனவே தீக்குச்சிக்குத் தீ ஏறும் வகை படிப்படியாக விருத்தி செய்யப்பட்டது என்பது தெரிகின்றது.

4. தீக்குச்சியும் இப்போது செய்யப்படும் முறைப்படி, ஆதிகாலத்தில் செய்யப்படவில்லை. மெல்லிய மரக்குச்சிகளைக் கந்தக நீரில் தோய்த்து உலரவைத்து அக்காலத்தில் தீக்குச்சி செய்தார்கள். அந்தக் குச்சி நெருப்பில் வைத்தால் எரியும். பிறகு வெடியுப்பு, பிசின், சர்க்கரை ஆகிய மூன்றும் கொண்ட குழம்பில் மெல்லிய மரக்குச்சிகளின் முனைகளைத் தோய்த்து உலர வைத்துத் தீக்குச்சிகளைச் செய்தார்கள். இந்தக் குச்சிகளை எரிய வைக்கக்

கல்நாரும், கந்தகப் புளிப்பு நீரும் கலந்த இரசாயனப் பொருள் தேவையாயிருந்தது. அதன் பிறகு நீலாஞ்சன கந்தகம், வெடியுப்பு, பிசின் ஆகிய மூன்றும் சேர்ந்த குழம்பில் தோய்த்து உலர வைத்த தீக்குச்சிகள் செய்யப்பட்டன.

5. இவற்றை மருந்து பூசிய அட்டையின் மீது தேய்த்தால் தீ உண்டாகும். இப்பொழுது நாம் உபயோகப்படுத்தும் தீக்குச்சிகள் இவ்வாறுதான் செய்யப்படுகின்றன. இம்முறையில் நாம் கவனிக்க வேண்டியது ஒன்று உண்டு. அதாவது தீயைத் தரும் மருந்து முழுவதும் குச்சியிலேனும் அல்லது பெட்டியில் பூசப்பட்ட மருந்திலேனும் இல்லை. குச்சியில் ஒரு பாகமும் பூசப்பட்ட மருந்தில் ஒரு பாகமும் அந்த மருந்து சேர்க்கப்பட்டிருக்கிறது. இதனால் ஒரு நன்மை உண்டு: குச்சியை மருந்தின் மீது தேய்த்தால்தான் தீ ஏற்படும். குச்சி தற்செயலாக எரிவதற்குக் காரணம் இல்லை. இவ்விதமான தீக்குச்சிகளைத் **தீங்கற்ற தீக்குச்சிகள்** என்று சொல்லுவர்.

6. முதன் முதலில் தீக்குச்சிகள் ஐரோப்பாவிலுள்ள **சுவீடன்** தேசத்தில் செய்யப்பட்டன. அந்தக் குச்சிப் பெட்டிகளே நம் தேசத்தில் இறக்குமதி செய்யப்பட்டன. பிறகு ஜப்பான் தீவுகளிலிருந்து நமக்குத் தீக்குச்சிப் பெட்டிகள் வந்தன. ஆனால், இப்பொழுதோ, நம் இராச்சியத்திலேயே திருவொற்றியூர், சாத்தூர், சிவகாசி முதலிய இடங்களில் பெரிய தொழிற்சாலைகளில் தீக்குச்சிப் பெட்டிகள் செய்யப்படுகின்றன. அன்றியும் இப்போது பெரம்பூரில் நமது சென்னை அரசாங்கத்தார் தீக்குச்சிப் பெட்டி தொழிற்சாலை ஒன்றை நிறுவியுள்ளனர்.

### 1. புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| தற்செயலாக | ஆதிகாலத்தில் | இரசாயனம் |
| உராய்வது | புசித்து | வெடியுப்பு |
| தீக்கடைகோல் | தயாரித்து | கல்நார் |
| பற்றிக்கொண்டு | பிற்பட்ட | கந்தகம் |
| வேண்டும்போது | பரவியுள்ள | தீங்கு |
| நெருப்புச் சட்டி | வித்தியாசம் | இறக்குமதி |
| அறியாதபடி | தேவையாக | சிக்கிமுக்கி |

### 2. கேள்விகள் :

1. முதன் முதலில் மனிதன் எவ்வாறு தீ உண்டாக்கினான் ?
2. ஆதிகாலத்தில் மனிதர் தீ உண்டாக்கிய வழிகளில் இரண்டைக் கூறு.
3. தீக்குச்சி செய்யப்படும் விதத்தைப் பற்றி எழுது.
4. பூசு மருந்தின் வரலாற்றை எழுது.
5. நம் மாகாணத்தில் தீக்குச்சி தொழிற்சாலைகள் எவ்விடங்களில் இருக்கின்றன ?

### 3. பயிற்சி :

(1) 1. கற்களைத் **தேய்த்து**த் தீ உண்டாக்கலாம்.
2. குச்சிகளின் முனைகளைத் **தோய்த்து**க் காய வைப்பார்கள்.
3. அரசன் குதிரை மேல் **ஏறி** வந்தான்.
4. புலவர் பாட்டைப் **பாடி** முடித்தார்.

இவற்றில் உள்ள **தேய்த்து, தோய்த்து, ஏறி, பாடி** என்ற சொற்களைக் கவனி. ஒவ்வொரு சொல்லும் ஒரு செயலைக் குறிக்கிறது. ஆனால், செயல் முடிந்ததாகச் சொல்லில் அர்த்தமாகவில்லை. செயல் முடிவு பெறாமல் குறைவாக இருக்கிறது. குறைவு என்பது **எச்சம்**. ஆகையினால், குறைவுள்ள வேலைகளைக் குறிக்கும் சொல்லுக்கு **வினை யெச்சம்** என்று பெயர். எனவே, தேய்த்து, தோய்த்து, ஏறி, பாடி என்ற நான்கு சொற்களும் வினையெச்சங்கள். முடிந்த வேலையைக் காட்டும் சொல்லை நாம் வினைச்சொல் என்று சொல்லி வந்தோம். அதை **வினை முற்று** என்று சொல்லவேண்டும். தேய்த்தான், தோய்த்தான், ஏறினான், பாடினான் என்பன நான்கும் வினை முற்றுக்கள்.

**(2) கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள வினை யெச்சங்களையும், வினை முற்றுக்களையும் இரண்டு வரிசையாக எடுத்து எழுது :**

1. அவன் பயந்து ஓடினான்.
2. கிருமிகள் அழிந்து சாகும்.



## 10. என் பெயர்

பச்சைக் குழந்தை என்றனுக்குப்
பக்குவ மாகப் பெயர் வைக்க
இச்சை கொண்டனர் பெரியோர்கள்;
என்னைச் சுற்றிக் கூடினரே.

அம்மா உடனே அவளுடைய
அப்பா பெயரைக் குறிப்பிட்டு,
'சம்பந் தம்என அழைத்தாலே
சரிப்படும்' என்று கூறினளே.

'இல்லை, இல்லை. என் அப்பா
பெயரைத் தான்நாம் இடவேண்டும்.
செல்லப் பன்என வைப்பதுதான்
சிறந்தது' என்றார் என் அப்பா.

‘இரண்டும் வேண்டாம். பிள்ளைக்கு
ஏற்றது சாமிப் பெயரேதான்.
பரம சிவன்தான் நல்ல’தெனப்
பாட்டி உரக்கக் கூறினளே.

மூவரும் சண்டை போட்டார்கள்.
முடிவே இல்லை. ஆதலினால்,
மூவரும் சேர்ந்து என்றனுக்கு
முப்பெயர் இட்டு அழைத்தார்கள்.

அம்மாவுக்குச் சம்பந்தம்
அப்பாவுக்குச் செல்லப்பன்.
பாட்டிக் கோநான் பரமசிவன்.
பள்ளியில் இனிமேல் எப்பெயரோ !

—அழ. வள்ளியப்பா



## 11. பாரதியார்

*"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்*
*தேன்வந்து பாயுது காதினிலே,"*

என்ற பாடலை நீ கேட்டிருக்கிறாய் அல்லவா? அந்தப் பாடலைப் பாடியவர் யார் என்று உனக்குத் தெரியுமா? அவர்தாம் **சுப்பிரமணிய பாரதியார்** என்ற கவிஞர் ஆவர். அவரது வரலாற்றைத் தமிழ் மக்கள் அனைவரும் அறிந்து கொள்வது அவசியமாகும்.

2. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள **எட்டயபுரம்** என்னும் ஊரில் **சின்னசாமி ஐயர்** என்பவர் வசித்து வந்தார். அவர் எட்டயபுர ஜமீன்தாரிடம் கணக்கராக வேலை பார்த்து வந்தார். அவருடைய மனைவியார் **இலக்குமி அம்மாள்** என்னும் பெயரினையுடையவர் ஆவர். அவ்வம்மையாருக்கு 1882-ஆம்

ஆண்டில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக் குழந்-தைக்குச் **சுப்பிரமணியன்** எனப் பெயரிடப்பட்டது. பெற்ருேரும் மற்ருேரும் சுப்பிரமணியனைச் செல்வ-மாகச் சுப்பையா என்று அழைத்து வந்தனர்.

3. சுப்பையா இளமைப் பருவத்திலேயே தமிழ் மொழியில் பற்று உடையவராய் விளங்கினர். அவர் தமிழ் நூல்கள் பலவற்றை விருப்பத்துடன் கற்றுப் பாடல்கள் இயற்றும் திறமையைப் பெற்ருர். அவருடைய சிறந்த பாடல்களைப் படித்து இன்புற்ற அறிஞர் பெருமக்கள், அவருக்குப் 'பாரதி' என்ற பட்டத்தைக் கொடுத்துச் சிறப்பித்தார்கள். அது முதல் சுப்பையா '**பாரதியார்**' எனவே அழைக்கப்-பட்டு வந்தார்.

4. பாரதியார் தமிழில் சிறந்த புலமை பெற்ற-துடன், வடமொழி, ஆங்கிலம் முதலிய மொழிகளையும் கற்றுத் தேர்ச்சி பெற்ருர். அவர் வாழ்ந்த காலத்தில் நம் நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டுக் கிடந்தது. நம் நாட்டினர் எவ்வித உரிமையும் இன்றித் துன்பம் அடைந்தனர். அயலார் ஆட்சியிலிருந்து நம் பாரத நாடு விடுதலை அடையும் பொருட்டுக் காந்தி அடிகள், ஜவாஹர்லால் நெஹ்ரூ போன்ற தலைவர்கள் பாடுபட்டு வந்தார்கள். பாரதியார் பாரத நாட்டு விடுதலை முயற்-சியில் ஆர்வம் உடையவராய்க் கட்டுரைகளும், கவிதைகளும் எழுதி வந்தார்.

5. அவர் 'சுதேசமித்திரன்' பத்திரிகைக்குத் துணை ஆசிரியராக இருந்து வந்தார். பிறகு 'இந்தியா' என்ற பத்திரிகையைத் தாமே நடத்தி வந்தார். அவருடைய கட்டுரைகளும், கவிதைகளும் நாட்டு மக்களிடையே விடுதலை உணர்ச்சியைப் பரப்பின. ஆகையால்

ஆங்கில அரசாங்கம் அவரைக் கைது செய்ய முயன்றது. இங்கிலேயில் அவர்கள் கையில் சிக்க விரும்பாத பாரதியார், பிரெஞ்சுக்காரருக்கு உரிமை உடையதாய் விளங்கிய புதுச்சேரிக்குச் சென்றார்; அங்குச் சில ஆண்டுகள் தங்கியிருந்தார். பிறகு சென்னை திரும்பி வந்தார்.

6. பாரதியார் மீண்டும் சுதேசமித்திரன் பத்திரிகைக்குத் துணை ஆசிரியராய் இருந்தார். அப்போது அவர் திருவல்லிக்கேணியில் வசித்து வந்தார். பாரதியார் நாள்தோறும் திருவல்லிக்கேணியில் உள்ள பார்த்தசாரதி கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்கி வருவது வழக்கம். அக்கோயிலின் முற்றத்தில் கட்டப்பட்டுள்ள யானைக்கு அவர் ஒவ்வொரு முறையும் தேங்காய், பழம் முதலியன கொடுப்பார்; அந்த யானை தன்னுடைய துதிக்கையை நீட்டி அவற்றை வாங்கியுண்ணும். ஒருநாள் பாரதியார் வழக்கம்போல் பழம் தர யானையிடம் நெருங்கினார். அவ்வமயம் மதவெறி கொண்டிருந்த யானை அவரைத் துதிக்கையால் பிடித்துச் சுழற்றித் தன் கால்களுக்கு இடையே போட்டுக்கொண்டது. அப்போது அருகில் இருந்த மக்கள் விரைந்து வந்து அவரைக் காப்பாற்றினார்கள். அந்த அதிர்ச்சியினால் பாரதியார் படுக்கையில் இருந்தார். அவர் சில மாதங்கள் நோய்வாய்ப்பட்டுக் கிடந்து, 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பதினோராம் நாள் காலமானார். தமிழ்நாடு பெற்றெடுத்த தவப் புதல்வர் பாரதியார் தமது முப்பத்தொன்பதாம் வயதில் இம்மண்ணுலக வாழ்வை நீத்தார்.

7. பாரதியார் அஞ்சாநெஞ்சம் பொருந்தியவர்; ஏழைகளிடத்தில் இரக்கம் கொண்டவர். அவர்

தமக்குக் கிடைத்த பொருள்களை ஏழை எளியவர்க்குக் கொடுத்து உதவும் இயல்பு உடையவர்; சாதிமத வேறுபாடுகளை வெறுக்கும் பண்பு பொருந்தியவர். திரு. வி. கலியாணசுந்தரனாரைப் போன்று இவரும் பெண்களுக்குப் பெருமையளிக்க வேண்டும் என்ற எண்ணம் படைத்தவராக இருந்தார்.

8. பாரதியாரின் பாடல்கள் எளிமையும் இனிமையும் வாய்ந்தவை. அவருடைய பாடல்கள் இளைஞர் முதல் முதியோர் வரை யாவருக்கும் இன்பம் அளிக்கும் இயல்பினை யுடையவை. பாரதியார் சில உரைநடை நூல்களையும் இயற்றியுள்ளார். பாரதியார் இயற்றிய செய்யுள் நூல்களுள் பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாப்பா பாட்டு, சுதேச கீதங்கள் என்பவை முக்கியமானவையாகும். சந்திரிகையின் கதை, ஞானரதம் முதலியன அவர் இயற்றிய உரைநடை நூல்கள் ஆகும்.

9. பாரதியார் நம் பாரதநாடு விடுதலை பெற வேண்டும் என்று கனவு கண்டார். அவர் கனவு பலித்துவிட்டது. நம் நாடு அயலார் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுவிட்டது. நம் நாட்டினர் பாரதியாரை 'அமரகவி' என்று பாராட்டிக் கொண்டாடுகின்றனர்; ஒவ்வோர் ஆண்டிலும் அவரது நினைவு நாள் செப்டம்பர் மாதம் பதினோராம் நாளில் நம் நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. பாரதியாரின் நினைவுச் சின்னமாக அவர் பிறந்த எட்டயபுரத்தில் மண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அவருடைய சிறந்த நூல்களைப் படித்தும், அவருடைய அருஞ்செயல்களைப் போற்றியும் வருவது நமது கடமையாகும்.

### 1. புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| பற்று | நீத்தார் | பலித்தது |
| இன்புற்ற | பண்பு | போற்றுதல் |
| கவிதை | படைத்தவர் | அமரகவி |

### 2. கேள்விகள் :

(1) பாரதியாரின் பெற்ருேர் யாவர் ?

(2) பாரதியார் வாழ்ந்த காலத்தில் நம் நாடு எவ்வாறு இருந்தது ?

(3) அவர் புதுச்சேரிக்குச் சென்றது எதனுல் ?

(4) பாரதியார் எவ்வாறு காலமானுர் ?

(5) பாரதியாரின் பண்புகளை எழுதுக.

(6) அவருடைய நூல்களில் சிலவற்றை எழுது.

### 3. பயிற்சி :

**1. எதிர்ப்பதங்கள் எழுது :**

பிறப்பு, வெறுக்கும், பெருமை, இளைஞர், இன்பம்.

**2. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுது :**

இன்புற்று, தங்கியிருந்தார், பெற்றெடுத்த, அருஞ்செயல்.

## 12. லூயி பாஸ்டர்

1. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்; ஆகையினல் மக்கள் நோய்க்கு இடங் கொடாமல்



வாழ முயலவேண்டும். நோய்கள் பல வகைப்படும். அவற்றுள் சில தீரா நோய்கள் என்று சொல்லப்படும். நாகரிகம் முதிர, முதிர சாத்திர ஆராய்ச்சிகள் பெருகப் பெருக, மனிதன் தீராத நோய்களையும் தீர்க்கும் விதங்களையும் கண்டு பிடித்துக்கொண்டே இருக்கிருன். நோய்கள் முழுவதையும் தீர்க்க இயலாவிட்டாலும், அந்த நோய்களால் உண்டாகும் துன்பத்தைக் குறைக்கும் மார்க்கங்களையாவது அவசியம் கண்டு பிடிக்க வேண்டும் என்பது பெரிய மருத்துவர்களின் கருத்து. சென்ற நூற்ருண்டில் உலக மருத்துவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகளில் சிலவற்றைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

2. அவற்றுள் முதன்மையானது **குளோரோபாரம்** என்பது. பல் பிடுங்குதல், கட்டிகளை அறுத்துச் சிகிச்சை செய்தல், உடைந்த உறுப்புக்களைச் சீர்படுத்துதல் முதலிய சிகிச்சைகளைச் செய்யும்போது நோயாளிக்கு அதிக வலி ஏற்படுகின்றது. அந்த வலியை நோயாளி உணரவொட்டாமல் செய்வது குளோரோபாரம் என்னும் ஒருவகை மருந்து. குளோரோபாரத்தைத் தகுந்த அளவு உள்ளுக்குச்

சுவாசித்துக் கொண்டால், உடம்பின் மீது கத்தி கொண்டு அறுத்தாலும், வேறு வலி தரக்கூடிய சிகிச்சையைச் செய்தாலும், நோயாளிக்கு வலி தோன்ருது.

3. மனிதனுடைய நோய்கள் பல கண்ணுக்குப் புலப்படாத கிருமிகளினுல் உண்டாகின்றன என்பது நிபுணர்கள் கண்டறிந்த உண்மை. இந்தக் கிருமிகள் இடம் விட்டு இடம் வேகமாய்ப் பரவி நோயை அதிகப்படுத்தும் தன்மை உடையன. இரண வைத்தியம் செய்யும் மருத்துவர்கள் நோயாளிகளிடம் நெருங்கிப் பழகும்போது இரத்தக் கிருமிகள் அவர்களையும் அவர்களுடைய கருவிகளையும் பற்றிக் கொள்கின்றன. அந்த மருத்துவர்கள் அந்தக் கருவிகளைக் கொண்டே வேறு நோயாளிக்கு இரண வைத்தியம் செய்ய நேரும்போது, அந்தக் கிருமிகள் அந்த நோயாளியின் இரத்தத்திலும் பறவுகின்றன. எனவே, நோயைத் தீர்க்கவேண்டிய மருத்துவர்களே நோய் பரவுவதற்குக் காரணம் ஆகின்ருர்கள். ஆகையால் அவ்வாறு கிருமிகள் பரவாமல் இருப்பதற்குத் தங்கள் கைகளையும் கருவிகளையும் சுத்தப்படுத்தக் **கார்பாலிக் ஆஸிட்** என்ற மருந்தைக் கண்டு பிடித்திருக்கிருர்கள்.

4. இந்தக் கிருமிகளைப்பற்றி மிகவும் நன்ருய் ஆராய்ந்து அறிந்தவர் **லூயி பாஸ்டர்**. நம்மைச் சுற்றிப் பல கோடிக் கிருமிகள் இருக்கின்றன. ஆங்கிலத்தில், இந்தக் கிருமிகளுக்கு 'மைக்ரோப்' என்பது பெயர். நாம் சுத்தமாக இருந்தால், இந்த மைக்ரோப்கள் நம்மை ஒன்றும் செய்யா. இவை சூரிய வெப்பத்தால் அழிந்து போம். நாம் உட்கொள்-

ளும் எந்த உணவையும் நன்ருக வேகவைத்தால், அந்த உணவிலுள்ள மைக்ரோப்கள் எல்லாம் அழிந்துவிடும். ஆகையால்தான் அறிவாளிகள் எந்த உணவையும் வேகவைத்து உண்ண வேண்டும் என்று கூறுகின்ருர்கள்.

5. அவற்றைப் பற்றிய பல விஷயங்களேயும், அவற்றின் பல வகைகளேயும், அவற்ருல் ஏற்படும் தீமைகளே அகற்றிக் கொள்ளும் முறைகளேயும் கண்டுபிடித்தவர் லூயி பாஸ்டர். அவர் கண்டு பிடித்த பல மருத்துவ முறைகளில் மிகச் சிறந்தது நாய்க் கடியினுல் நேரும் ஆபத்தைத் தீர்க்கும் முறையாகும். இந்த முறையினுல் நாய்க்கடி விஷத்தை விருத்தி செய்யும் கிருமிகள் முழுதும் அழிக்கப்படுகின்றன. பாஸ்டரின் முறைகளின்படி மருத்துவம் செய்யும் கழகங்கள் உலகத்தில் பல இடங்களில் இருக்கின்றன. இந்தியாவில் அத்தகைய ஒரு கழகம் நமது சென்னே இராச்சியத்தில் **கூனூர்** என்னும் இடத்தில் இருக்கிறது.

6. மக்கள் சமூகத்திற்கு இவ்வளவு பெரிய தொண்டு செய்த லூயி பாஸ்டர் என்பவர், **பிரான்ஸ்** தேசத்தில் ஏறக்குறைய நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்தார். இளமையிலேயே அவருக்கு இரசாயன ஆராய்ச்சியில் விருப்பம் அதிகம். அந்த விருப்பத்தினுல்தான் அவரால் பிற்காலத்தில் பல அரிய பொருள்களே ஆராய்ந்து கண்டுபிடிக்க முடிந்தது. ஒரு சமயம் அவர் மதுபானத்தில் ஏற்பட்ட ஒருவகை வியாதியின் காரணத்தை ஆராய்ந்தறிந்தார். அந்த ஆராய்ச்சியின் பயனுகவே, அவர் மைக்ரோப்களேயும் அவற்றைப் பற்றிய பல செய்திகளேயும்

கண்டு பிடித்தார். இன்று உலகத்தில் பல மூலை-களிலும் உள்ள மனிதர் நாய்க்கடிக்குப் பயப்பட வேண்டிய நிலைமை ஏற்படாதபடி செய்த பெருமை லூயி பாஸ்டருக்கு உரியதாகும்.

### 1. புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| ஆராய்ச்சி | சீர்படுதல் | சமூகம் |
| முயலவேண்டும் | புலப்படாத | தொண்டு |
| தீராத நோய் | கிருமிகள் | மார்க்கம் |
| சாத்திரம் | நிபுணர்கள் | கருவி |
| சிகிச்சை | மருத்துவர் | மதுபானம் |
| தன்மை | இரணவைத்தியம் | உரியது |
| நேர்ந்தது | மருத்துவமுறை | |

### 2. கேள்விகள் :

1. குளோரோபாரத்தினுல் உண்டாகும் உபயோகம் என்ன?
2. நோய்க் கிருமிகளைப்பற்றி உனக்கு என்ன தெரியும் ?
3. 'கார்பாலிக் ஆஸிட்' எவ்வாறு உபயோகப்படுகிறது ?
4. 'மைக்ரோப்' என்பது என்ன ?
5. நாம் உணவை ஏன் வேகவைத்து உண்ண வேண்டும் ?

### 3. பயிற்சி :

(1) **கொன்ற** யானை
**ஏறுகிற** மனிதன்
**படிக்கும்** பிள்ளை

இவற்றில் வந்துள்ள **கொன்ற, ஏறுகிற, படிக்கும்** என்ற சொற்களைக் கவனி. இவை, மூன்றும் **பெயரெச்சங்கள்** என்று சொல்லப்படும். **கொன்ற** என்பது வினைச்சொல். அதன் பொருள் முற்றுப் பெறவில்லை. பொருள் முற்றுப்பெருத வினைச்சொல், பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிந்தால் அதைப் **பெயரெச்சம்** என்று சொல்ல வேண்டும்.

(2) கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள பெயரெச்சங்களை எடுத்து எழுது :

1. உடைந்த எலும்புகளைச் சீர்படுத்தினர்.
2. படித்த பிள்ளை ஒழுங்காய் நடப்பான்.
3. அது கண்ட புலவர் மனம் நொந்தார்.
4. தழைத்த மரம் நிழல் தரும்.

---



## 13. சோப்புச் செய்தல்

1. "கூழானாலும் குளித்துக் குடி; கந்தையானாலும் கசக்கிக் கட்டு," என்பது தமிழ் மொழியில் வழங்கும் ஓர் அரிய பழமொழி. இதனால் உடம்பையும், உடைகளையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பது தெரிகிறது. மிகப் பழைய காலத்தில் குளிக்காமலும், உடைகளைச் சுத்தப்படுத்தாமலும் மக்கள் இருந்தார்கள். நாளடைவில் தற்செயலாய்க் குளிப்பதால் ஏற்படும் சுகத்தையும், சுத்த உடை உடுப்பதால் ஏற்படும் சுகத்தையும் தெரிந்து கொண்டார்கள். ஆயினும், அவர்கள் உடம்பின் அழுக்கையும் உடையின் அழுக்கையும் போக்கத்தக்க பொருள்கள் இன்னவை என்று அறியாமல் இருந்தார்கள். பிறகு அவர்கள் புன்கங்கொட்டை,

உவர் மண் முதலிய பொருள்களால் தங்களேயும், தங்கள் ஆடைகளேயும் சுத்தப்படுத்தத் தெரிந்து கொண்டார்கள். அறிவும், நாகரிக விருப்பமும் வளர வளர உடலில் தேய்த்துக் குளிக்கப் பல பொருள்கள் சேர்ந்த மா(வு) வகைகளேக் கண்டுபிடித்துக் கொண்டார்கள்.

2. இவ்வாறு நெடுங்காலம் மக்கள் தங்கள் உடலேயும் உடையையும் தூய்மை செய்துகொள்ள எடுத்துக் கொண்ட முயற்சி இக்காலத்தில் சோப்பு என்னும் பொருளில் வந்து முடிந்திருக்கிறது. சோப்பில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று குளிப்பதற்கு உபயோகப்படும் சோப்பு. மற்ருென்று ஆடைகளேச் சுத்தப்படுத்த உபயோகப்படும் சோப்பு.

3. தேங்காய் நெய், வேர்க்கடலே நெய், வேப்ப நெய் முதலியவற்ருல் சோப்புச் செய்யலாம். நெய்கள் அகப்படாத தேசங்களில் திமிங்கிலம், ஆடு, மாடு முதலியவற்றின் கொழுப்பைக் கொண்டு சோப்புச் செய்கிருர்கள். எண்ணெய் ஒன்றே அல்லது கொழுப்பு ஒன்றே சோப்பாக மாறிவிடாது. அப் பொருளுடன் **காஸ்டிக் சோடா** என்னும் பொருளேச் சேர்க்கவேண்டும்.

4. ஓர் எடை காஸ்டிக் சோடாவை மூன்று எடை தண்ணீரில் நன்ருய்க் கலக்கவேண்டும்; அந்தக் கலவை நன்ருய்த் தெளியவேண்டும். தெளிந்த நீரை இரும்புத் தொட்டியில் ஊற்றி மூடி வைக்க வேண்டும். பின்னர் நான்கு எடை தேங்காய் நெய்யை மற்ருெரு இரும்புத் தொட்டியில் வைத்துக் கொண்டு அதில் தெளிந்த காஸ்டிக்சோடா

நீரின் ஒரு பாதியை ஊற்றவேண்டும். அப்பொழுது நெய் பொங்குவதுபோலத் தோன்றும். அதைச் சீப்பு போன்ற முனையுடைய இரும்புத் துடுப்பினால் விடாமல் கலக்கிக் கொண்டு இருக்க வேண்டும். பிறகு, மற்றப்பாதி தெளிவு நீரையும் அதில் சேர்த்து மேலும் கிளற வேண்டும். இவ்வாறு அரை மணி நேரம் கிளறினால், தேங்காய் நெய்யும், காஸ்டிக் நீரும் நன்றாகக் கலந்து ஒருவகைக் குழம்பாகும். இந்தக் குழம்பைப் பக்குவப்பட்ட ஒரு சதுரப் பெட்டியில் ஊற்றி மூடி, ஒரு நாள் முழுதும் ஆறவிடவேண்டும்.

5. மறு நாள் அந்தப் பெட்டியின் நான்கு சுவர்களையும் கழற்றி எடுத்துவிட்டால், சோப்பு ஒரு சதுர வடிவமுள்ள பெருங்கட்டியாக நிற்கும். அதை மெல்லிய கம்பியினால், வேண்டிய கனம் வைத்துப் பலகைகளாக அறுக்க வேண்டும். அப்பலகைகளைத் தக்க கருவி கொண்டு கழிகளாக அறுக்க வேண்டும். அந்தக் கழிகளைப் பிறகு வேண்டிய ஓர் அளவு வைத்துத் துண்டுகளாக வெட்டிக் கொள்ளலாம். அந்தத் துண்டுகளின் மேல் சோப்பின் பெயரையும், வேண்டிய மற்ற விவரங்களையும் தக்க முத்திரை இயந்திரத்தால் அழுத்திக் கொள்ளலாம். இந்தச் சோப்புத் துண்டைத்தான், நாம் கடையில் வாங்கி உபயோகிக்கிறோம்.

6. மேலே சொல்லப்பட்டது சோப்புச் செய்யும் **குளிர்ந்த முறை** எனப்படும். சோப்பின் முதற் பொருள்களை முதலிலேயே நன்றாய்க் கொதிக்க வைத்துப் பிறகு ஆற்றி, அறுத்துச் சோப்புச் செய்வதும் உண்டு. இந்தச் சோப்புக்கள் உடைகளை வெளுக்க உபயோகப்படும். குளிக்க உதவும் சோப்-

TB 031 (4)
89929

புக்களைச் செய்யும் மார்க்கமும் இதுவே. ஆனால், சோப்புக் குழம்பாயிருக்கும் பதத்தில் விரும்பிய நிறம் தரும் பொருளும், வேண்டிய வாசனை தரும் பொருளும் சேர்க்கப்பட்டால், அதிலிருந்து அறுக்கப்படும் சோப்புக்கள் குளிப்பதற்கும் உதவும். நல்ல மணமுள்ள மலர்களின் சாரமும், சந்தனத் தைலம் முதலியனவும் குளிக்க உபயோகப்படும் சோப்பில் கலக்கப்படுகின்றன: சொறி, சிரங்கு முதலிய சரும நோய்களைத் தீர்ப்பதற்குரிய மருந்துகளைச் சேர்த்தும் சோப்புக்கள் செய்யலாம்.

7. சோப்புச் செய்தல் ஒரு சிறு தொழில். அதை எவரும் தம் வீட்டிலேயே செய்யலாம். இன்று நம் நாட்டில் பல இடங்களில் இந்தத் தொழில் சிறிய அளவிலும் பெரிய அளவிலும் பலரால் செய்யப்படுகின்றது.

**1. புதிய சொற்கள் :**

| | | | |
|---|---|---|---|
| போக்கிக்கொள் | கலவை | தைலம் | பதம் |
| உவர்மண் | தெளிவு | பலரால் | சாரம் |
| திமிங்கிலம் | தூய்மை | ஆற விடு | துடுப்பு |
| பிரத்தியேகம் | மணம் | கழற்று | விவரம் |

**2. கேள்விகள் :**

1. சோப்புக்களில் எத்தனை வகை உண்டு ?
2. எந்தெந்த நெய்களிலிருந்து சோப்புச் செய்யலாம்?
3. சோப்பில் சேர்க்கப்படும் இரசாயனப் பொருள்கள் யாவை ?
4. சோப்புக் குழம்பிலிருந்து கடையில் வாங்கும் சோப்பு எவ்வாறு செய்யப்படுகிறது ?
5. துணிச் சோப்பிலிருந்து குளியல் சோப்பு எவ்வாறு செய்யப்படும் ?

### 3. பயிற்சி :

(1) அவன் **தான்** கண்ணன்.
பறவை **போலப்** பறந்தது.
குதிரை **மேல்** ஏறினன்.

இவற்றிலுள்ள **தான், போல, மேல்** என்பன மூன்றும் **இடைச் சொற்கள்** என்று சொல்லப்படும். ஏன்? இரண்டு சொற்களுக்கு இடையிலாவது, வாக்கியங்களுக்கு இடையிலாவது வரும் சொற்களுக்கு இடைச்சொற்கள் என்பது பெயர். இடையில் வரும் சொல் **இடைச் சொல்.**

**(2)** கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள இடைச்சொற்களை எழுது:

1. கொழுப்புடன் ஒரு பொருளைச் சேர்ப்பார்கள்.
2. மரத்தின் கீழ்ச் செடிகள் இருக்கின்றன.
3. கமலம் அறிவுள்ளவள்; ஆகையால் அவள் பரிசு பெற்றுள்.
4. அம்மை கிருமியால் வரும் தொற்று வியாதி.

(3) **ஐயோ, சீ, ஆ**—முதலியனவும் இடைச் சொற்களே. இவை கோபத்தையும், மகிழ்ச்சியையும், துக்கத்தையும் குறிக்க உபயோகிக்கப்படுகின்றன. இவை ஒவ்வொன்றையும் தனித் தனியே அமைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.

---

# 14. மறைந்த நகரம்

1. நமது பாரத நாட்டில் பண்டைக் காலத்தில் பெரும் புகழோடு விளங்கிய நகரங்களுள் சில அழிந்து மறைந்தன. சோழர் தலைநகரமாக இருந்த காவிரிப்பூம்பட்டினம், பல்லவர் துறைமுகமாக இருந்த மாமல்லபுரம், விசயநகரப் பேரரசின் தலைநகர-மாயிருந்த வித்யாரண்ய நகரம் முதலியவற்றை அவ்-வாறு அழிந்து மறைந்த நகரங்களுக்கு உதாரணங்க-ளாகக் கூறலாம். இப்பாடத்தில் **வித்யாரண்ய நகரத்**தைப்பற்றிப் படிப்போம்:

2. இந்நகரம் கி. பி. 1336-ல், அதாவது அறுநூறு ஆண்டுகளுக்கு முன் நிருமாணிக்கப்பட்டது. அக்-காலத்தில் வட இந்தியாவில் முஸ்லிம்களின் ஆட்சி ஏற்பட்டது முஸ்லிம் மன்னர்கள் சிறிது சிறிதாகத் தட்சிணத்தில் இருந்த இந்து இராச்சியங்களைத் தாக்கிப் பிடிக்க முற்பட்டார்கள். துங்கபத்திரை காகவே இந்தமுஸ்லிம்கள் வராதபடி தடுப்பதற்-நதிக்குத் தெற்கே நகரம் நிருமாணிக்கப்பட்டது.

3. வித்யாரண்யர் என்பவர் ஒப்பற்ற துறவி. அவருக்கு **அரிகரர், புக்கர்** என்ற சீடர் இருவர் இருந்தனர். அவர்கள் துங்கபத்திரை யாற்றின் வட கரையில் ஆட்சி புரிந்துவந்த ஒரு இந்து மன்னரிடம் மந்திரிகளாக இருந்தார்கள். அவர்களுடைய அரசை முஸ்லிம்கள் பற்றிக்கொண்டதால், அவர்கள் தங்கள் நாட்டைவிட்டு ஓடிவந்து, தங்கள் குருவின் ஆணைப்-படி துங்கபத்திரையாற்றின் தென்கரையில் ஒரு நகரத்தை நிருமாணித்தார்கள். அதற்குத் தங்கள் குருவின் பெயரையே வழங்கினார்கள். அந்நகரம்

தோன்றிய இடம் இராமாயணத்தில் சுக்ரீவன் என்ற குரங்கு மன்னன் ஆண்ட **கிஷ்கிந்தை மலையைச்** சார்ந்ததாகும்.

4. வித்யாரண்ய நகரம் நாளடைவில் பரந்து பெரிதாயிற்று. அதன்கண் சிறந்த கோட்டையும், எழில் மிக்க ஆலயங்களும், எண்ணற்ற கட்டடங்களும் தோன்றின. வித்யாரண்ய நகரைத் தலைநகரமாகக் கொண்ட விசயநகரப் பேரரசை யாண்ட மன்னர்களுள் ஒப்பற்றவராக விளங்கியவர் **கிருஷ்ண தேவ ராயர்.** அவர் காலத்தில் விசயநகரப் பேரரசு துங்கபத்திரை நதியிலிருந்து தென் இந்தியா முழுமையும் பரவி இருந்தது. அவர் காலத்துக்குப் பிறகு



ஹம்பியின் பொதுத் தோற்றம்

அந்த இராச்சியத்தின் பகைவர்களான முஸ்லிம் மன்னர்கள் ஒன்றுசேர்ந்து அதைத் தாக்கி வெற்றி பெற்றார்கள்; பிறகு அதனை அழித்துவிட்டார்கள்.

அவ்வாறு அழிந்த பட்டணத்தின் சின்னங்களை நாம் அங்கு இப்போதும் காணலாம்.

5. வித்யாரண்ய நகரம் இருந்த இடம் இப்போது ஹம்பி என வழங்குகிறது. அது ஆந்திர இராச்சியத்தில் உள்ள பல்லாரி என்னும் பட்டணத்துக்கு மேற்கே முப்பத்திரண்டு மைல் தொலைவில் இருக்கிறது. ஹோஸ் பேட்டை என்னும் புகை வண்டி நிலையத்திலிருந்து ஆறு மைல் தொலைவு சென்றால் ஹம்பியை அடையலாம். அங்குச் செல்பவர்கள் வியப்பில் மூழ்கும்படியான அநேக கோயில்களும், சிற்பங்களும், சிலைகளும், கட்டடங்களும் அங்குக் காணப்படுகின்றன.

6. கோயில்களில் முக்கியமானவை **பம்பாபதி கோயில், விட்டல் சுவாமி கோயில், இராமசாமி கோயில்** என்பன. இவை தவிர இங்குப் பல **அனுமார் சிலை**கள் உண்டு. அவற்றுள் ஒன்று இருபது அடி உயரம் உள்ளதாக இருக்கிறது. வியப்புக்குரிய மற்றொரு சிலை **நரசிம்ம சுவாமி**யின் சிலை. கட்டடங்களில் **தாமரை மண்டபம்** சிறப்புள்ளது. இவை தவிர எத்தனையோ சிதைந்த மண்டபங்களின் மேடைகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று அரசரின் கொலு மண்டபம். இவை யனைத்தும் அழிந்து கிடந்தாலும் காண்பதற்கு அழகாகவே இருக்கின்றன. இவற்றின் பெருமையை நேரில் கண்டறியவேண்டும்; எழுதி வருணிக்க முடியாது.

**1. புதிய சொற்கள் :**

| | | | |
|---|---|---|---|
| பண்டைக்காலம் | துறவி | சார்ந்தது | ஒப்பற்ற |
| உதாரணம் | ஆட்சி | அதன்கண் | சின்னங்கள் |

| | | | |
|---|---|---|---|
| நிருமாணி | ஆணைப்படி | எண்ணற்ற | வியப்பு |
| தட்சிணம் | வழங்கினர் | பேரரசு | சிற்பம் |

**2. கேள்விகள் :**

1. நமது நாட்டு அழிந்த நகரங்களுள் இரண்டின் பெயரை எழுது.
2. வித்யாரண்ய நகரம் நிருமாணிக்கப்பட்டது ஏன் ?
3. அதை நிருமாணித்தவர் யாவர் ?
4. அது எங்கே இருக்கிறது? அதற்கு அப்பெயர் வரக் காரணம் யாது ?
5. ஹம்பியில் காணப்படும் முக்கிய சின்னங்களில் சிலவற்றைக் கூறு.

**3. பயிற்சி :**

**(1) எதிர்ப் பதங்கள் எழுது :**

| | |
|---|---|
| பண்டைக் காலம் × | பரந்த × |
| புகழ்ச்சி × | பகைவர் × |
| வடகரை × | உள்ளது × |

**(2) வாக்கியங்களில் அமைக்கவும் :**

பண்டைக் காலம், மறைந்தன, பேரரசு, முற்பட்டனர், வியப்பு, சின்னம், பெரும்புகழ்.



## 15. விளையாட்டுப் பந்தயங்கள்

**மணி**: மாணிக்கம், இந்த நேரத்தில் எங்கே போகிறுய் ?

**மாணிக்கம்**: மணி, தெரியாதா உனக்கு ? இன்று சர்வ பாடசாலை ஆண்டுப் பந்தய நாளாயிற்றே ! அதில் கலந்து கொள்ள எங்கள் பள்ளிக்கூடச் சார்பாக என்னையும் அனுப்பி இருக்கிறுர்கள். அதற்காகத்தான் விரைவாகப் போகிறேன்.

**மணி**: நீ எந்தெந்தப் பந்தயங்களில் கலந்து கொள்ளப் போகிறுய் ?

**மாணி**: ஐம்பது மீட்டர் ஓட்டம், இசை நாற்காலி ஆகிய இரண்டிலும் நான் கலந்துகொள்வேன்.

**மணி**: உன் நண்பன் முத்துகூட உங்கள் பள்ளிக்-கூடக் குழுவில் இருக்கிறுனு?

**மாணி**: ஆம், முத்துகூட இருக்கிறுன். அவன் கொடி ஓட்டம், தாண்டல், மைல் ஓட்டம் ஆகிய மூன்றிலும் கலந்துகொள்வான்.

**மணி**: மாணிக்கம், நானும் வருகிறேன் உங்கள் பந்தயத்தைப் பார்க்க.

மணியும் மாணிக்கமும் பந்தய மைதானத்தை அடைந்தார்கள். வழியில் முத்துவும் அவர்களைச் சந்தித்தான். மாணிக்கமும் முத்துவும் மைதா-னத்தில் நுழைந்ததும் தங்கள் பள்ளிக்கூடக் குழுவுடன் சேர்ந்தார்கள். மணி, தூரத்தில் இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பிள்ளைகளோடு கலந்துகொண்டான்.

பந்தய நடுவர் ஐவர் மைதானத்தின் ஒருபுறத்தில் நாற்காலிகளில் அமர்ந்திருந்தனர். பிறகு அவர்கள் ஒவ்வொரு பந்தயமாக நடத்தத் தொடங்கினுர்கள். முதலில் ஐம்பது மீட்டர் ஓட்டம் நடந்தது. அதில் ஐந்து பள்ளிக்கூடங்களிலிருந்து பத்துப் பிள்ளைகள் வந்து போட்டியிட்டார்கள். அந்தப் போட்டியில் மாணிக்கம் இரண்டாவதாக வெற்றி பெற்றுன். அதன் பிறகு, தாண்டும் போட்டி நடத்தப்பட்டது. அதில், பல பிள்ளைகள் கலந்துகொண்டார்கள். அவர்-களில் முத்துவும் இருந்தான். ஆனுல், முத்து நான்கா-வதாக வந்தான். ஆகையால், அவனுக்குப் பரிசு ஒன்றும் கொடுக்கமாட்டார்கள். முத்து உற்சாக-மாகவே அடுத்தபடி நடத்தப்பட்ட கொடி ஓட்டத்-தில் கலந்துகொண்டான். அதில் அவன் பிரயாசைப்

பட்டு ஓடித் தன் பள்ளிக்கூடத்திற்கு வெற்றியைச் சம்பாதித்தான்.

கொடி ஓட்டத்திற்குப் பிறகு இசை நாற்காலிப் பந்தயம் ஆரம்பமாயிற்று. அதில் கலந்து கொண்டவர் பதின்மூன்று பேர். அவர்கள், ஒருவர்பின் ஒருவராக வட்டமிட்டுக்கொண்டிருந்தனர். அவர்களின் நடுவில் பன்னிரண்டு நாற்காலிகள் வைக்கப்பட்டு இருந்தன. பந்தய நடுவர் ஒருவர் ஊதலை ஊதியவுடன், வட்டமிடுவோர் ஓட்டத்தை நிறுத்தி, விரைந்து சென்று, நாற்காலிகளில் அமரவேண்டும். பதின்மூன்று பேர்களுக்குப் பன்னிரண்டு நாற்காலிகளே இருக்கும். ஆதலால் ஒருவனுக்கு நாற்காலி கிடைக்காது. அவன் ஆட்டத்திலிருந்து கழிக்கப்படுவான். பிறகு நடுவிலிருந்து ஒரு நாற்காலி எடுக்கப்படும். அப்பொழுது பன்னிரண்டு பேர்களுக்குப் பதினொரு நாற்காலிகள் இருக்கும். மறுபடியும் பந்தயக்காரர்கள் வட்டமிட்டுக்கொண்டே இருப்பார்கள்; ஊதலை ஊதியவுடன் ஓட்டத்தை நிறுத்தி விரைவில் சென்று, நாற்காலியில் அமர்வார்கள். ஒருவனுக்கு நாற்காலி கிடைக்காது. அவன் வெளியேற வேண்டும். அவனோடு ஒரு நாற்காலியும் குறையும். இவ்விதமாக நாற்காலிகள் குறைந்துகொண்டே வரும். இறுதியில் ஒரு நாற்காலி நிற்கும். அதைச் சுற்றி இருவர் வட்டமிடுவர். ஊதலை ஊதியவுடன், முதலில் வந்து, நாற்காலியில் உட்காருபவன் முதல் பரிசு பெறுவான். மற்றவனுக்கு இரண்டாம் பரிசு கொடுக்கப்படும். இந்தப் பந்தயப் போட்டியில் மாணிக்கம் முதல் பரிசு பெற்றான்.

இசை நாற்காலிக்குப் பிறகு ஒரு மைல் ஓட்டப் போட்டி நடத்தப்பட்டது. இதில் எல்லாப் பள்ளிக்-

கூடங்களிலிருந்தும் மாணவர் பலர் கலந்துகொண்டனர். மைதானத்தில் நட்டிருந்த கொடிகளால், குறிக்கப்பட்டிருந்த வட்டத்தை நான்குமுறை சுற்றினால் ஒரு மைல் தூரமாகும். இந்தப் பந்தயத்தில் முத்துவும் போட்டியிட்டான். மணி அடித்தவுடன் பந்தயம் ஆரம்பமாயிற்று. ஆரம்பத்தில் நம் முத்துதான் கடைசியில் ஓடிக்கொண்டிருந்தான். ஒரு சுற்று முடியும் வரையில், முத்து கடைசிப் பந்தயக்காரனாய் இருந்தான். வட்டத்தை இரண்டாம் முறையாகச் சுற்றி வரும்போது அவன் வேகத்தை அதிகரித்துத் தனக்கு முன் ஓடிய பந்தயக்காரர்களில் ஒவ்வொருவரையும் கடந்து கொண்டே முன்னோக்கி ஓடிக்கொண்டிருந்தான். மூன்றும் சுற்று ஓடும்போது அவன் நான்காமவனாக இருந்தான். நான்காம் சுற்று ஆரம்பித்ததும், அவன் மார்பை விரித்துக்கொண்டு தலையைப் பின்னால் சாய்த்துக்கொண்டு அதிவேகமாய் ஓடி, முன் செல்லும் மூவரையும் தாண்டி, முதல்வனாக வந்து வெற்றி பெற்றான்.

பந்தயங்கள் முடிந்த பிறகு மாணிக்கமும் முத்துவும் தங்களுடைய பரிசுகளைப் பெற்றுக் கொண்டார்கள். பிறகு அவர்கள் மணியுடன் சேர்ந்து மூவருமாக வீடு திரும்பினார்கள்.

**1. புதிய சொற்கள் :**

| | | |
|---|---|---|
| கலந்துகொள்ள | சம்பாதி | பந்தயக்காரன் |
| சார்பாக | வட்டமிட்டு | கடந்துகொண்டு |
| எங்கெங்கும் | அமரவேண்டும் | அதிவேகம் |
| குழு | கழிக்கப்படும் | முதல்வனாக |
| சந்தித்தான் | வெற்றி | போட்டி |
| நடுவர் | வெளியேற | குறிக்கப்பட்டு |

### 2. கேள்விகள் :

1. மாணிக்கம் எங்தெந்தப் பந்தயங்களில் கலந்து கொண்டிருந்தான் ?

2. முத்து வெற்றி பெற்ற பந்தயங்கள் யாவை ?

3. மைல் ஓட்டத்தைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

4. இசை நாற்காலிப் பந்தயத்தை விவரித்து எழுது.

### 3. பயிற்சி :

1. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய அறுவகைப் பெயர்ச் சொற்களுக்கும் ஒவ்வோர் உதாரணம் கொடு.

2. இந்தப் பாடத்திலிருந்து ஆறு வினைமுற்றுக்களும், நான்கு வினையெச்சங்களும் கூறுக.




## 16. உயிர்த் தோழர்கள்

1. சில நூற்றுண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பாக் கண்டத்தில் **சிசிலி** நாட்டில், ஒரு கொடிய மன்னன் ஆட்சி செய்து வந்தான். அவன் அற்பனுகவும், முன்கோபியாகவும், ஆத்திரமுள்ளவனுகவும் புத்தியற்றவனுகவும் இருந்தான். அவன் ஆட்சி புரிந்த காலத்தில் சிசிலியில் இரண்டு நண்பர்கள் வசித்து வந்தார்கள். அவர்களுள் ஒருவன் பெயர் **தாமன்.** மற்றவன் பெயர் **பிதியசு.**

2. தாமனும் பிதியசும் மிகவும் நெருங்கிய நண்பர்கள். அவர்களிடையே எந்தக் காலத்திலும் மனவேற்றுமை ஏற்பட்டதே இல்லை. அவர்களுடைய நட்பு அத்தேசத்து இளைஞர்களுக்கு ஒரு எடுத்துக்-

காட்டாய் இருந்தது. பெரியோர்களுங்கூட அவர்களுடைய நட்பைக் கண்டு மகிழ்ச்சியும் வியப்பும் அடைந்தார்கள்.

3. ஒரு சமயம் பிதியசு என்பவன் மன்னனுடைய சீற்றத்திற்கு ஆளாகும்படி நேர்ந்தது. அற்பனுகிய அரசன், காரணம் ஒன்றுமே இல்லாமலும், தீர விசாரிக்காமலும் பிதியசுக்குத் தூக்குத் தண்டனை விதித்து விட்டான். அதை அறிந்த தாமன் மனம் புழுங்கினுன். அவனுடைய நெஞ்சம் நண்பனுக்குப்பதிலாகத் தான் தூக்குத் தண்டனையை ஏற்றுக்கொள்ள விரும்பியது. அவ்விருப்பத்தை அரசனிடம் தெரிவித்தான். ஆனல் கொடுங்கோல் மன்னன் அதற்கு உடன்படவில்லை. பிரியா நண்பர்களைப் பிரித்து வைப்பதில் அற்பனுகிய அவன் அதிக மகிழ்ச்சி கொண்டான். ஆகவே தாமன் ஊணும் உறக்கமுமின்றித் தன் வீட்டில் இருந்தான்.

4. பிதியசைத் தூக்கில் இடுவதற்காகக் குறிக்கப்பட்ட நாளும் நெருங்கிற்று. இறப்பதற்கு முன் அவன் தன் குடும்பத்தாரைக் காண விரும்பினுன்; அவ்விருப்பத்தை அரசனுக்குத் தெரிவித்தான். சற்றும் மன இரக்கம் இல்லாத மன்னன், “ உனக்குப் பதிலாக இங்கே சிறையிலிருக்க ஒருவனை நீ வைத்து விட்டு, உன் விருப்பப்படி, உன் குடும்பத்தாரைக் கண்டு வரலாம்; குறித்த நாளில் நீ வந்து சேராவிட்டால் இங்கே சிறையில் இருப்பவன் உனக்குப் பதிலாகத் தூக்கில் இடப்படுவான்,” என்று கூறினுன். அந்த நிபந்தனைக்குப் பிதியசு இசைந்தான். உடனே தன் உயிர்த் தோழனுன தாமனை வரவழைத்துச் சிறையில் வைத்துவிட்டுத் தன் குடும்பத்தாரைப்

பார்த்துவிட்டுக் குறித்த தேதிக்குள் திரும்புவதாகக் கூறி விடை பெற்றுச் சென்ருன்.

5. தாமன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். தன் உற்ற நண்பனுகிய பிதியசுக்கு, நல்ல சமயத்தில் இவ்விதமான உதவி செய்யும் வாய்ப்புத் தனக்குக் கிடைத்ததை எண்ணி அவன் அகமகிழ்ந்தான். "எந்தக் காரணத்தாலாவது குறித்த நாளில் பிதியசு வந்து சேராமல் இருக்க வேண்டும்," என்று கூடத் தாமன் விரும்பினுன். ஏனென்ருல் அவ்வாறு பிதியசு வாராமல் இருந்தால், அவனுக்குப் பதிலாகத் தான் தூக்கில் இடப்பட்டு உலகத்தாரால் உத்தம நண்பன் என்று புகழப்படும் பேறு பெறலாமல்லவா? அந்தப் புகழை அடையத் தாமன் விரும்பினுன்.

6. நாட்கள் கழிந்தன. குறித்த நாளும் வந்தது; இன்னும் பிதியசு வந்து சேரவில்லே. பலரும் பிதியசு வரமாட்டான் என்றே எண்ணினர். அரசனும் அவ்வாறே நினேத்தான். தாமனுக்கோ அளவற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. நண்பனுக்குப் பதிலாகத் தானே தூக்கில் உயிர்விட அவன் விரும்பினுன். சிறைக் காவலர் குறிப்பிட்ட வேளேயில் அவனேத் தூக்கு மேடைக்கு அழைத்துச் சென்றனர்; நண்பனுக்குப் பதிலாகத் தாமன் உயிர் விடுவதைக்காண மக்கள் திரளாக அங்கு வந்து சேர்ந்திருந்தார்கள். தூக்குக்கயிறு தாமன் கழுத்தில் மாட்டப்பட்டது. அடுத்த நொடியில் கயிறு மேலுக்கு இழுக்கப்பட்டால் தாமன் அந்தரத்தில் தொங்கி, ஆவியை இழப்பான்.

7. ஆனல் அந்தச் சமயத்தில் தூரத்தில் ஓர் ஒலி உண்டாயிற்று. பிதியசு ஒரு குதிரையின் மேல்

ஏறி, அதிவேகமாய் வந்து கொண்டிருந்தான். "நிறுத்-துங்கள், நிறுத்துங்கள்!" என்று அவன் உரத்துக் கூவினன். அவன் கூச்சலைக் கேட்ட அதிகாரிகள் சற்று நிதானித்தார்கள். ஒரு நொடியில் பிதியசு அங்கு வந்து சேர்ந்தான். தன் பரியை விட்டுக் குதித்து இறங்கித் தூக்கு மேடையின்மேல் பாய்ந்து ஏறி, கயிற்றை நண்பன் கழுத்திலிருந்து கழற்றித் தன் கழுத்தில் மாட்டிக்கொண்டு, "ஒரு நிமிடம் தாமதித்து இருந்தால் உலகத்தவர் என்னைத் துரோகி என்று பழிப்பதற்கு ஆளாயிருப்பேன். ஆண்டவன் காப்பாற்றினன். உங்கள் வேலை ஆகட்டும்," என்று கூறினன். இந்தக் காட்சிகளை எல்லாம் அங்கிருந்து கண்ட கொடுங்கோல் மன்னனுக்கு இரக்கம் உண்டாயிற்று. "இவ்வளவு நட்புடைய நண்பர்-களும் உலகத்தில் இருக்கின்றார்கள் அல்லவா!" என்று அவன் அதிசயித்துக் கூறி, பிதியசு தூக்கில் இடப்படுவதைத் தடுத்துவிட்டான். "இனி நீங்கள் சுயேச்சையாகச் சென்று, நீண்ட காலம் உயிர்த் தோழர்களாய் இருந்து வாழுங்கள்!" என்று கூறி அவர்களை வாழ்த்தி அனுப்பிவிட்டு அரசன் அரண்-மனைக்குச் சென்றான்.

**1. புதிய சொற்கள்:**

| | | |
|---|---|---|
| அற்பன் | அதிசயித்து | திரளாக |
| சிற்றம் | முன்கோபி | சுயேச்சை |
| விதித்து | மனவேற்றுமை | வழிகாட்டி |
| உறக்கம் | மனம்புழுங்கி | தூக்குத் தண்டனை |
| குறிக்கப்பட்ட | ஏற்றுக்கொள்ள | ஊண் |
| நிபந்தனை | கிடைக்கும்படி | இடுவதற்கு |
| விடைபெற்று | இரக்கம் | சிறை |
| உத்தமன் | உயிர்த்தோழன் | அகமகிழ்ச்சி |
| தூக்குமேடை | வாய்ப்பு | காவலர் |

### 2. கேள்விகள் :

1. தோழர்களின் நட்பைப் பற்றி இரண்டு வாக்கியங்கள் எழுது.

2. அரசனுடைய தீய குணத்தைப் பற்றி இரண்டு வாக்கியங்கள் எழுது.

3. தாமன், பிதியசுக்கு என்ன உதவி செய்ய விரும்பினன் ?

4. தாமனுடைய நற்குணத்தைப்பற்றி எழுது.

5. தூக்கு மேடை அருகில் நடந்தவைகளைப் பற்றிச் சுருக்கமாக எழுது.

6. கொடுங்கோல் அரசன், தோழர்களுக்கு ஏன் விடுதலை கொடுத்தான் ?

### 3. பயிற்சி :

(1) ஒவ்வொன்றுக்கும் வேறு சொல் கூறு:

பரி, மன்னன், சீற்றம், புழுங்கினன், நெஞ்சம், உறக்கம், மகிழ்ந்தான்.

(2) ஒவ்வொன்றுக்கும் திணை, பால், எண், இடம் எழுது:

தாமன், கயிறு, கொடி, நீங்கள், காட்சி.

(3) இந்தப் பாடத்தில் உள்ள ஏழாம் பத்தியைச் சுருக்கி எழுது.

(4) ஒவ்வொரு சொல்லையும் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.

நெருங்கிய, நண்பர்கள், எடுத்துக்காட்டு, மகிழ்ச்சி, வியப்பு, ஊண் உறக்கமில்லாமல், உற்ற நண்பன், உத்தமத் தோழன்.



## 17. அண்ணல் காந்தி

1. காந்தி அடிகளாரை நாம் நமது நாட்டுத் தந்தை எனப் புகழ்ந்து பேசுகிறோம். அவர் அவ்வாறு புகழப்படுவது ஏன் என்பதை நாம் அறிதல் வேண்டும். ஆதலால் அவர் வாழ்க்கைக் குறிப்புக்களுள் சிலவற்றை இப்பாடத்தால் அறியலாம்.

2. காந்தியடிகள் 1869-ஆம் ஆண்டில் நமது நாட்டில் மேற்குப் பகுதியில் உள்ள கத்தியவாரில் இருக்கும் **போர்பந்தர்** என்னும் ஊரில் பிறந்தார். அவர் தந்தையார் பெயர் **காபா காந்தி**; தாயார் பெயர் **புட்லிபாய்** என்பதாம். அவர் தக்க வயது வந்தவுடனே பள்ளிக்கு அனுப்பப்பட்டார். அங்கு அவர் கல்வியை நன்கு கற்றுவந்தார். அவர் உயர்நிலைப் பள்ளியில் படித்தபோது அவருக்குத் திருமணம் நடந்தது. அவர் மனைவியின் பெயர் **கஸ்தூரிபாய்** என்பதாகும். மெற்றிகுலேஷன் பரீட்சையில் தேறிய

பிறகு அவர் இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கு நீதி வாதத் தொழிலுக்கு உரிய சட்டப் பரீட்சையில் தேறி இந்தியாவுக்குத் திரும்பினார்.

3. நாடு திரும்பிய காந்தியார் பம்பாயில் நீதி வாதத் தொழிலைத் தொடங்கினார். அப்போது தென் ஆப்பிரிக்காவில் வாணிகம் செய்துவந்த இந்தியர் ஒருவர் ஒரு வழக்கில் தமக்காக வாதிடுவதற்காகக் காந்தியாரைத் தென் ஆப்பிரிக்காவுக்கு அழைத்துச் சென்றார். அக்காலத்தில் அங்கு வாழ்ந்துவந்த இந்தியரை ஆப்பிரிக்காவில் வாழ்ந்துவந்த ஆங்கிலேயர் மிகவும் கொடுமையாகவும், இழிவாகவும் நடத்திவந்தனர். அது கண்ட காந்தி மனம் புண்பட்டார் ; அக்கொடுமையை எவ்வாற்றானும் அகற்ற முற்பட்டார். துப்பாக்கிப் பலம் பெற்றிருந்த வெள்ளையரோடு போர் புரிய முடியாதென எண்ணி ஆயுதமில்லாத அறப் போர் தொடங்கினார். அதில் ஓர் அளவு வெற்றிகண்ட பிறகு தமது தாய்நாடு திரும்பினார்.

4. தாய்நாடு திரும்பிய காந்தியார் பாரத நாட்டின் சுதந்தரத்துக்காகப் பாடுபட முற்பட்டார். இந்தியாவை அடிமைப்படுத்தி ஆண்டுவந்த ஆங்கிலேயரை அறப்போரால் வென்று வெளியேற்றினார். அவருடைய தலைமையில் இந்திய மக்கள் தாய்நாட்டுக்காகத் தியாகம் செய்தார்கள். அந்தத் தியாகத்தின் பலனாக இந்தியா சுதந்தரம் பெற்றது. நாம் எல்லாரும் சுதந்தர மக்களாக வாழ்ந்து வருகிறோம். காந்தியடிகள் இந்தியாவின் சுதந்தரத்துக்காகப் பாடுபட்டதனால் மட்டும் நாம் அவரைப் போற்றிப் புகழவில்லை. அவரிடம் காணப்பட்ட சிறந்த நற்குணங்கள் காரணமாகவே அவர் புகழப்பட்டார். அதனாலேயே அவருக்கு

**மகாத்மா** என்னும் பெயரும் வழங்கலாயிற்று. இனி அவருடைய அருங் குணங்களில் சிலவற்றைப்பற்றித் தெரிந்துகொள்வோம்.

5. காந்தியடிகள் இளைஞரா யிருந்தபோது நாடகங்களைப் பார்ப்பதில் விருப்பம் கொண்டிருந்தார். அவர் பார்த்த நாடகங்களில் **அரிச்சந்திரன் நாடக**மும், **சிரவணகுமார் நாடக**மும் அவரைப் பெரிதும் மகிழ்வித்தன. அரிச்சந்திரன் நாடகம் பார்த்தது முதல் காந்தியார், 'எப்போதும் மெய்யே பேசவேண்டும்; பொய்யை அறவே ஒழிக்கவேண்டும்' என்று உறுதி கொண்டார். அவர் வாழ்நாள் முழுவதும் அவ்வாறே நடந்துகொண்டார். அங்ஙனமே தன் தாய், தந்தையருக்குப் பணிவிடை புரிவதையே தன் கடமையாகக் கொண்ட சிரவணகுமார் நாடகத்தைப் பார்த்த காந்தியும் தன் பெற்றோருக்கு உரிய பணிவிடைகளைச் செய்வதில் பெரு மகிழ்ச்சி கொண்டார்.

6. காந்தியார் ஆறும் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது பள்ளித் தணிக்கையாளர் வந்தார். அவர் காந்தியின் வகுப்பிற்கு வந்தபோது மாணவர்க்குக் கேட்டெழுதும் பயிற்சி யொன்று தருமாறு வகுப்பு ஆசிரியருக்கு உத்தரவிட்டார். ஆசிரியர் சில ஆங்கிலச் சொற்களைக் கூறினார். மாணவர்கள் அவற்றைக் கேட்டு எழுதினார்கள். அச் சொற்களுள் ஒன்றை மட்டும் காந்தி தவறாக எழுதியிருந்தார். அது கண்ட ஆசிரியர் தம் கால் விரல்களால் காந்தியின் கால்விரல்களை அழுத்தி, அடுத்த பையனைப் பார்த்து அச்சொல்லைச் சரியாக எழுதும்படி கண்ணால் குறிப்பிட்டார். ஆனால் காந்தியார் அதனை அறிந்தும்,

அத்தவற்றைச் செய்யவில்லை. அவர் வாய்மை எவ்வளவு சிறந்தது பாருங்கள் !

7. காந்தியடிகள் தமது வாழ்க்கை வரலாற்றைத் தாமே ஒரு நூலாக எழுதியுள்ளார். அதற்குச் **சத்திய சோதனை** என்பது பெயர். அதில் இம்மாதிரி நிகழ்ச்சிகள் எத்தனையோ உண்டு. அவற்றைப் படித்து நீ பயன் பெறவேண்டுவது உனது கடமையாகும்.

### 1. புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| அடிகளார் | புண்பட்டார் | தாய்நாடு |
| வாழ்க்கைக் குறிப்பு | அறப்போர் | சுதந்தரம் |
| உயர்நிலைப்பள்ளி | முற்பட்டார் | தியாகம் |
| நீதிவாதத் தொழில் | வெற்றிகண்ட | மகாத்மா |

### 2. கேள்விகள் :

1. காந்தியார் எங்குப் பிறந்தார் ? எப்போது பிறந்தார் ?
2. காந்தியாரின் பெற்றோர் யாவர் ?
3. காந்தியடிகள் இங்கிலாந்துக்கு ஏன் சென்றார்?
4. காந்தியார் தென் ஆப்பிரிக்காவில் செய்தது யாது ?
5. காந்தியார் தமது தாய் நாட்டுக்குச் செய்த நன்மை யாது ?
6. காந்தியாரின் சிறந்த பண்புகள் எவை ?

### 3. பயிற்சி :

**(1) எதிர்ச் சொற்கள் எழுது :**

| | |
|---|---|
| புகழ்ந்து × | மெய் × |
| சிலவற்றை × | கொடுமை × |
| கற்றவர் × | தொடங்கு × |

**(2) வாக்கியத்தில் அமைத்து எழுது :**

புகழ்கிறோம், குறிப்புக்கள், திருமணம், தொடங்கு, பாடுபடு, இளைஞர், அறவே ஒழி, பணிபுரிய

## 18. மொத்தம் எத்தனை?

(பாட்டு)

பட்டணம் செல்ல ஒருராஜா
பயணம் வைத்தார். அவருடனே

ஒன்றாய்ச் செல்ல அவருடைய
ஒன்பது மனைவியர் புறப்படவே,

ஒவ்வொரு மனைவியின் பின்னாலும்
ஒன்பது குழந்தைகள் சென்றனராம்.

ஒவ்வொரு குழந்தையின் பின்னாலே
ஒன்பது நாய்கள் புறப்படவே,

ஒன்பது நாயின் பின்னாலும்
ஒன்பது குட்டிகள் சென்றனவாம்.

பட்டணம் செல்ல ராஜனுடன்
பயணம் வைத்தவர் மொத்தத்தில்

எத்தனை என்று சரியாக
என்னிடம் சொல்வாய் 'பட்'டென்று?

தெரிந்திட வில்லை யானாலோ
திருப்பிடு இதனைத் தலைகீழாய்!

7380

—அழ. வள்ளியப்பா

# 19. கடிதங்கள் - 1

## 1. ஓய்வு விண்ணப்பம்

95, புதுத் தெரு,
சென்னே,
15-10-57.

ஐயா,

இம்மாதம் 20-ஆம் தேதியன்று, என் சிறிய தகப்பஞரின் பெண்ணுக்குத் திருநின்றவூரில் திரு-மணம் நடைபெறப் போகிறது. அந்தத் திருமணத்-திற்கு என் பெற்ருேர்களுடன் நானும் போக வேண்டியவனுய் இருக்கிறேன். திருமணம் முடிந்த மறுநாளே நாங்கள் சென்னேக்கு வந்துவிடுவோம். ஆகையினுல், தயைகூர்ந்து 17-10-57 முதல் 22-10-57 வரை ஆறு நாட்கள் எனக்கு விடுமுறை தருமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்.

இங்ஙனம்,
தங்கள் பணிவுள்ள மாணவன்,
**பி. வி. வேங்கடேசன்.**

**முகவரி :**

**திருவாளர் கெ. இராமாநுசம் பிள்ளே அவர்கள்,**
தலேமையாசிரியர்,
வாணி விநோத மந்திரப் பாடசாலே,
இராயபுரம், சென்னே.

## 2. ஓய்வு விண்ணப்பம்

103, பவழக்காரத் தெரு,
சென்னை,
17-10-57.

ஐயா,

நேற்று நடந்த பள்ளிக்கூட வருடாந்திரப் பந்தயங்களைப் பார்த்துவிட்டு வீடு திரும்பும்போது சிறு தூறல் தூறியது. அதில் நனையும்படி நேர்ந்தது; அதனால், இன்று காலை எனக்குக் காய்ச்சல் ஏற்பட்டு விட்டது. அதைத் தீர்த்துக் கொள்ள டாக்டர் குருசாமி முதலியார் அவர்களிடம் சென்றேன். அவர் ஒரு வாரம் வரை நான் வீட்டிலேயே தங்கி, ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறினார். ஆகவே, இன்று முதல் ஒரு வாரம் வரையில் நான் பள்ளிக்கூடத்திற்கு வர முடியாதவனாய் இருக்கிறேன். அதற்காக மன்னிக்கவும்.

வணக்கம்!

இப்படிக்கு,
தங்கள் பணிவுள்ள மாணாக்கன்,
அ. பார்த்தசாரதி.

**முகவரி :**

**திரு. எ. ஆர். சேஷாசலம் அவர்கள்,**
ஏழாம் வகுப்பு ஆசிரியர்,
என். எ. பி. ஆரம்ப பாடசாலை,
ஏழுகிணறு, சென்னை.

**குறிப்பு :**

இதைப்போன்ற கடிதங்கள் எழுத மாணவர் பழக வேண்டும்.

# 20. கடிதங்கள் — 2

### நண்பர் கடிதம்

94, புதுத் தெரு,
மண்ணடி, சென்னை,
15-10-57.

என் அன்புள்ள சுந்தரம்,

இங்கு நாங்கள் அனைவரும் நலமாய் இருக்கிறோம். இருந்தாலும் உன்னைவிட்டுப் பிரிந்திருப்பது எனக்குச் சற்றுத் துன்பமாகவே இருக்கிறது.

நேற்று நானும், என் தமக்கையின் கணவரும் படக்காட்சி பார்க்க, ‘மினர்வா டாக்கி’சுக்குப் போயிருந்தோம். அங்கே முதலில் விஞ்ஞான சம்பந்தமான ஒரு படம் காட்டப்பட்டது. அதைப் பார்த்த பிறகு எனக்குப் பல செய்திகள் தெளிவடைந்தன. அவற்றைப் பற்றி நீ இங்கு வந்த பிறகு சொல்லுகிறேன். அந்தச் சிறு படத்திற்குப் பிறகு அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்ட மார்தர் உதவிப் படையைப் பற்றிய ஒரு சிறு படமும் காட்டப்பட்டது. அதைக் கண்டும் பல விடயங்கள் அறிந்தோம். அதன் பின்னர், ஒரு கதைப் படம் காட்டப்பட்டது. அதைப் பற்றி உனக்கு உடனே எழுத வேண்டுமென்ற அவாவினால் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

கதை ஒரு ஆகாய விமானியைப் பற்றியது. அமெரிக்காவின் அரசாங்கத்தைச் சேர்ந்த ஒரு விஞ்ஞானக் கழகத்தில் இந்தச் சரிதை ஆரம்பமாகிறது.

அவ்வப்போது இயற்கையில் தோன்றும் புதிய விடயங்களை ஆராய்ந்து அறியும் வேலையில் அந்தக் கழகத்தார் ஈடுபட்டிருந்தனர். ஒரு நாள் பசிபிக் சமுத்திரத்தில் ஒரு பெரிய சுழற் காற்று வீசிக்கொண்டிருப்பதாக அந்தக் கழகத் தலைவருக்கு ஒரு செய்தி வந்தது. உடனே அவர் தம் கீழ் அலுவல் செய்யும் ஆகாய விமானி எவரேனும் அந்தச் சுழற் காற்றுக்குள் விமானத்துடன் பிரவேசித்து விஞ்ஞான உண்மைகளை அறிந்துவர முன் வருவாரா என்று கேட்டார். உடனே கதாநாயகனும், அவனுடைய தோழன் ஒருவனும் அந்த ஆபத்தான காரியத்தில் துணிந்து இறங்க உடன்பட்டார்கள். கழகத் தலைவர் அவர்களுக்கு மறுபடியும் அத்தகைய காரியத்தில் நேரக்கூடிய விபத்துக்களை விவரமாக எடுத்துச் சொன்னார். அவற்றை யெல்லாம் கேட்டபிறகு, கதாநாயகனும், அவன் தோழனும் சற்றும் பின்வாங்காமல், காரியத்தில் தலையிடச் சம்மதித்து உடனே ஆயத்தமானார்கள்.

அவர்கள் புறப்பாடும், அவர்கள் உடன் எடுத்துச் சென்ற விஞ்ஞானக் கருவிகளும், ஆகாய விமானத்தில் ஏறிக்கொண்டு அவர்கள் வெகு உயரத்தில் பறந்து சென்றமையும், சுழற் காற்றில் தங்கள் விமானத்தை அவர்கள் மிக்க தைரியத்துடன் செலுத்திச் சென்றமையும், விமானத்திற்கு ஏற்பட்ட பல திடுக்கிடத்தக்க விபத்துக்களும் திரையில் காட்டப்பட்டன. அவற்றையெல்லாம் நீயும் நேரில் அந்தத் திரைப் படத்தில் பார்த்திருந்தால், வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்திருப்பாய். பலவித ஆபத்துக்களுக்கிடையே இந்த விமானத் தோழர்கள் சற்றும் மனம் தளராமல்,

தாங்கள் மேற்கொண்ட வேலையை முடித்துக்-கொண்டு கழகக் கட்டடத்திற்குத் திரும்பிவந்த காட்சி பார்ப்போருக்குப் பெரு மகிழ்ச்சியை யளித்தது. அவர்கள் எடுத்துச் சென்ற கருவிகளின் நிலைமையைக் கொண்டும், அவர்கள் தாங்கள் செய்த வேலையைப் பற்றி எழுதிக்கொடுத்த விவரங்களிலிருந்தும் சில உண்மைகள் கண்டு பிடிக்கப்பட்டன.

இந்தப் படத்தைப் பார்க்கும்போது, நீ அதைப் பார்ப்பதற்கு இங்கு இல்லையே என்று வருத்தப்பட்-டேன். நீ எப்பொழுது இவ்விடம் வருவாய்? உடனே பதில் எழுதவும்.

இப்படிக்கு,
உன் அன்பன்,

**இராகவன்.**

**முகவரி :**

**திரு. சுந்தரராசன்,**
நெ. 78, பெரிய தெரு,
திருச்சிராப்பள்ளி.

---

**குறிப்பு :**

வேறு நிகழ்ச்சிகளைப் பற்றிய இத்தகைய கடிதங்கள் எழுத மாணவர் பழக வேண்டும்.

**1. புதிய சொற்கள் :**

| | | |
|---|---|---|
| தலைமை | பணிவு | கூர்ந்து |
| தூறல் | ஓய்வு | திருவாளர் |
| மன்னிக்கவும் | சுழற் காற்று | விண்ணப்பம் |
| படக்காட்சி | வணக்கம் | உதவிப்படை |
| சரிதை | விஞ்ஞானம் | விமானி |
| கதாநாயகன் | மாறுதல் | அலுவல் |
| புறப்பாடு | திடுக்கிடத்தக்க | சம்மதித்து |

### 2. கேள்விகள் :

1. இராகவன் என்னென்ன படங்களைப் பார்த்தான் ?

2. ஆகாய விமானிகள் மேற்கொண்ட வேலை என்ன ?

3. ஆகாய விமானங்களின் புறப்பாட்டைப்பற்றி இரண்டு வாக்கியங்கள் எழுது.

### 3. பயிற்சி:

(1) ஒவ்வொரு வினைமுற்றுக்கும் மற்ற இரண்டு காலவினை முற்றுக்கள் எழுது :

1. நான் பள்ளிக்கூடம் வந்துவிடுகிறேன்.
2. அவனை நான் கண்டுவிட்டேன்.
3. சீக்கிரம் வீட்டிற்குத் திரும்பிவிடுவேன்.

(2) நான்கு பெயரெச்சங்கள் எழுது :

(3) ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் எழுது.

அஃறிணை, பலவின்பால், படர்க்கைப் பன்மை, வினையெச்சம்.

## 21. பிக்மிக்கள்

1. 'பிக்மிக்கள்' என்பது ஆங்கிலச் சொல். இதற்குக் குள்ளர்கள் என்பது பொருள். உன் தந்தையார், தாயார், ஆசிரியர் போன்ற மக்களின் உயரம் சராசரி ஐந்தரை அடி உயரமாகும். ஆனல் இந்தப் பிக்மிக்களில் நன்ருக வளர்ந்தவர்களே நான்கடி உயரந்தான் இருப்பார்கள். ஆதலாற்ருன் அவர்களுக்கு இப் பெயர் வழங்குவதாயிற்று. இம்மாதிரிச் சித்திரக் குள்ளர்களைப்பற்றி அறிந்துகொள்ள நீ விரும்புகிருய் அல்லவா ?



பிக்மிக்கள்

2. பிக்மிக்கள் **ஆப்பிரிக்காக் கண்டத்தில்** வாழ்கிருர்கள். மிகப் பரந்த நிலப் பகுதிக்குக் கண்டம் என்பது பெயர். நமது நாட்டுக்குத் தென்மேற்கில் வெகு தொலைவில் இருக்கிறது ஆப்பிரிக்காக் கண்டம். அதில் அநேக யாறுகள் ஓடுகின்றன. அவற்றுள் **காங்கோ** என்பதும் ஒன்று. அது மிகப் பெரி-

யது. அது பூமத்திய ரேகைப் பகுதியில் பாய்வதால் அங்கு ஆண்டு முழுவதும் மழை பொழிகிறது. அதிக வெப்பமும் மழையும் உள்ள இடங்களில் அடர்ந்த காடுகள் உண்டாகும் அல்லவா ? ஆதலால் காங்கோ யாறு பாயும் பகுதியில் அடர்ந்த காடுகள் உள்ளன. அந்தக் காடுகளின் இடையில்தான் பிக்மிக்கள் வசிக்கிறார்கள்.

3. காங்கோக் காடுகளில் கொடிய விலங்குகள் வசிக்கின்றன. அவற்றுள் யானைகளும், குரங்குகளும் முக்கியமானவை. தரை சதுப்பாக இருப்பதால் அங்கு நஞ்சுள்ள உயிரினங்களும் அதிகம். அத்தகைய காட்டுக்கு இடையில் உள்ள மரங்களைத் தீயிட்டு



பிக்மிக்கள் வசிக்கும் குடிசைகள்

எரித்துப் பிக்மிக்கள் வெளியிடங்களாக்குவார்கள். இந்த வெளியிடங்களில் தரையில் கழிகளை நடுவார்-

கள். அவற்றைக் குறுக்குக் கழிகள் கொடுத்துக் கட்டி ஒன்ருேடு ஒன்று வளைத்து இணைப்பார்கள். வண்டிக் கூண்டுபோல அமைக்கப்பட்ட கழிகளின்மீது பனையோலைகளையும், தழைகளையும், மரப்பட்டைகளையும் வேய்ந்து அவர்கள் தங்கள் வீடுகளை அமைத்துக்கொள்ளுகிருர்கள். இக்குடிசைகள் பல ஒன்றன் பக்கத்தில் ஒன்ருக அமைக்கப்படும். ஆதலால் அவை ஒரு சிற்றூரைப் போலக் காணப்படும். இந்தப் பகுதியில் பெய்யும் பெரு மழையையும் இக் குடிசைகள் தாங்கும்.

4. பிக்மிக்கள் பெரும்பாலும் தழைகளையே அணிந்துகொள்வார்கள். வேட்டையாடுவதே அவர்களுடைய தொழிலாகும். வில்லும் அம்பும் அவர்களுடைய வேட்டைக் கருவிகளாம். அந்த அம்புகளின் முனையை நஞ்சில் தோய்த்து வைத்திருப்பார்கள். பிக்மிக்கள் குறிபார்த்து அம்பு எய்வதில் திறமைசாலிகள். உருவத்தில் குள்ளமாயிருப்பினும் அவர்கள் யானைகளை எளிதில் கொல்வார்கள். குரங்குகளையும் வேட்டையாடிக் கொல்வார்கள். தாங்கள் கொன்ற விலங்குகளின் இறைச்சியே அவர்களுடைய உணவாகும். இதுவன்றி அவர்கள் அக் காட்டுப் பகுதியில் உற்பத்தியாகும் வாழைப்பழத்தையும், பிற பழங்களையும் உண்பார்கள். மழை அதிகம் பெய்யும்போது வேட்டையாட முடியாது. அப்போது அவர்கள் தங்கள் குடிசைகளின் அருகில் கிடைக்கும் எலிகளையும், தவளைகளையும் பற்றித் தின்பார்கள்.

5. பிக்மிக்கள் நாகரிகமற்றவர்கள். அவர்கள் உணவைச் சமைப்பதில்லை. ஆதலால் அவர்களுக்கு அடிக்கடிப் பலவகையான நோய்கள் காண்பது

இயற்கையாகும். ஆதலால் அவர்கள் இளவயதி–லேயே இறப்பது இயற்கையாகின்றது. இத்தகைய அநாகரிக மக்களும் இக்காலத்தில் வெள்ளையரின் தொடர்பால் நாகரிகம் அடைந்து வருகிறார்கள்.

**1. புதிய சொற்கள் :**

| | | |
|---|---|---|
| பிக்மிக்கள் | பூமத்தியரேகை | தீயிட்டு |
| ஆங்கிலம் | பொழிகிறது | இளைப்பர் |
| சராசரி | காங்கோ யாறு | வேய்ந்து |
| நிலப்பகுதி | சதுப்பு நிலம் | சிற்றூர் |

**2. கேள்விகள் :**

1. பிக்மிக்களுக்கு அப்பெயர் வரக் காரணம் என்ன ?
2. காங்கோக் காடுகள் எங்குள்ளன ? அவை எப்படி இருக்கும் ?
3. பிக்மிக்கள் வீடுகளை எவ்வாறு அமைத்துக் கொள்கிறார் கள்?
4. பிக்மிக்கள் எவற்றை உண்கிறார்கள் ?

**3. பயிற்சி :**

**(1) தக்க நிறுத்தற்குறிகள் இடு.**

பிக்மிக்கள் ஆப்பிரிக்காக் கண்டத்தில் வாழ்கிறார்கள் மிகப் பரந்த நிலப் பகுதிக்குக் கண்டம் என்பது பெயர் நமது நாட்டுக்குத் தென் மேற்கே வெகு தொலைவில் ஆப்பிரிக்காக் கண்டம் இருக்கிறது அதில் அநேக யாறுகள் ஓடுகின்றன அவற்றுள் காங்கோ என்பதும் ஒன்று

**(2) எதிர்ப்பதங்கள் எழுது :**

| | |
|---|---|
| குள்ளன் × | சூடு × |
| விருப்பம் × | உள்ளன × |
| தொலைவு × | நாகரிகம் × |

**(3) வாக்கியங்களில் அமைத்து எழுதுக :**

ஆங்கிலம், சராசரி, நிலப்பகுதி, பொழிகிறது, நஞ்சு, உயிரினம், குறிபார்த்து, வேய்ந்து

# 22. மூக்கைத் தூக்கிய காக்கை

(பாட்டு)

வேலன் மனைவி கறுப்பாயி
விடிந்ததும் சண்டை துவக்கிடுவாள்.
காலம் எல்லாம் சண்டையிலே
கழிப்பாள், கணவன் வருந்திடவே.

சண்டை ஒருநாள் முற்றிடவே
சட்டென வேலன் கோபமுடன்
அண்டையி லிருந்த கத்தியினல்
அறுத்து விட்டான், அவள்மூக்கை.

வெட்டி எடுத்த மூக்குடனே
விரைந்து வைத்திய ரிடம்சென்றுள்.
'ஒட்டுப் போட்டுத் தைத்திடுவீர்
உமக்குப் புண்ணியம்,' எனச்சொன்னுள்.

துண்டு மூக்கை மேசையின்மேல்
தூக்கி வைத்தே வைத்தியரும்
துண்டுத் துணியால் அவள் முகத்தைத்
துடைத்துக் கொண்டு இருந்தனரே.

அறுந்து தனியாய் இருந்திட்ட
அந்த மூக்குத் துண்டதனைப்
பறந்து வந்த ஒருகாக்கை
பாய்ந்து தூக்கிச் சென்றதுவே.

கையைத் தட்டி வைத்தியரும்
கதறிப் பார்த்தார். ஆனுலும்
ஐயோ, ஏதும் பயனில்லை!
அலறித் துடித்தாள், கறுப்பாயி.

காக்கை மூக்கைத் தின்றதுவோ!
கடலில் போட்டு விட்டதுவோ!
மூக்கை இழந்த சூர்ப்பனகை
முக்கா டிட்டுத் திரும்பினளே!

—அழ. வள்ளியப்பா

# 23. நத்தை

1. நத்தை ஒரு சிறிய பிராணி. நத்தையில் இரண்டு வகைகள் உண்டு; ஒன்று நிலத்தில் வாழ்வது; மற்றொன்று நீரில் வாழ்வது. முதலில் நிலத்து நத்தையைப்பற்றிச் சில விடயங்கள் தெரிந்துகொள்வோம்:



2. நத்தையின் முதுகில் குடம் போன்ற ஓர் ஓடு உண்டு. அதன் உடல் அவ்வோட்டுக்குள் அடங்கும். அது அசையாமல் இருக்கும்போது வெறும் ஓடுதான் பார்ப்பவர்கள் கண்களுக்குப் புலப்படும். அது நகரும்போது பார்த்தால் ஓட்டுக்கு முன் புறம் தலையும், பின்புறம் வாலும் நன்றாய்த் தெரியும். நத்தையின் தலையில் குச்சிபோன்ற நான்கு உறுப்புக்கள் இருக்கின்றன. அவற்றில் இரண்டு மேற்புறத்திலும், இரண்டு கீழ்ப்புறத்திலும் காணப்படுகின்றன. இந்த உறுப்புக்களுக்கு **ஸ்பரிசினிகள்** என்பது பெயர். இவைகளால் நத்தை தன் வழியைத் தடவித் தடவித் தெரிந்துகொண்டு, நகர்ந்து செல்லும். நத்தையின்

தலையிலுள்ள கண், வாய் முதலிய மற்ற உறுப்புக்கள் எளிதில் புலப்படா. கூர்ந்து கவனித்தால்தான் அவை நமக்குத் தெரியும்.

3. நத்தையின் உடம்பு வெறும் மாமிசத்தாலானது. அதில் எலும்பே இல்லை. மழை பெய்து அடங்கின பிறகு புல்லடர்ந்த வெளிகளிலும், தோட்டங்களிலும் நத்தைகள் நகர்ந்து செல்வதைக் காணலாம். வெய்யிற் காலத்தில் நத்தைகள் கல், மரம் முதலியவற்றின் இடுக்குகளில் மறைந்திருந்து, மழை பெய்து ஓய்ந்ததும் வெளிப்பட்டு வரும். வெயிற் காலம் முழுவதும், நத்தை தன் உடலை ஓட்டுக்குள் ஒடுக்கிக்கொண்டு ஆகாரம் இல்லாமல் அசைவற்றுக் கிடக்கும்.

4. அதன் முதுகின் ஓடே அதற்கு வீடாகும். இளைப்பாற வேண்டுமானாலும், தனக்கு அபாயம் வருவதாக தோன்றினாலும், நத்தை தன் உடலை ஓட்டுக்குள்ஒடுக்கிக்கொள்ளும். இது ஒரு அதிசயமான சத்தியே! நத்தையின் ஓடு அதனுடைய உடலில் உண்டாகும் ஒருவகைப் பசையினால் ஏற்பட்டது. நத்தையின் ஆகாரம் இளம் தளிர்களே ஆகும். நத்தைகள் தாம் வாசஞ் செய்கின்ற காய்கறித் தோட்டங்களையும், பூந்தோட்டங்களையும் பாழாக்கிவிடும். எப்படியெனில், அந்தத் தோட்டங்களில் நாள்தோறும் தோன்றும் குருத்துக்களையும், தளிர்களையும் நத்தைகள் அன்றுடம் அரித்துத் தின்றுவிடும். ஆகையினால், நத்தைகளை அத்தகைய தோட்டங்களில் விருத்தியாக விடக்கூடாது.

5. கூர்ந்து நோக்காதபோது, நம் பார்வைக்குத் தெரியாத நத்தையின் வாய் முதலியவை, உற்று

நோக்கினல், சற்றுத் தெளிவாகத் தெரியும். நத்தையி-னுடைய வாயின்மேல் உதடு கனத்து உறுதியாய் இருக்கும். அதன் நாக்கில் ஆயிரக் கணக்கான மிகச் சிறிய பற்கள் அமைந்திருக்கின்றன. அவற்ருல், நத்தை தளிர்களை வெகு விரைவாகவும், எளிதாகவும் அரித்துத் தின்னும். நத்தையின் கால்கள் தனி உறுப்-புக்கள் அல்ல. அதன் உடம்பின் பாகங்களிலுள்ள தோலின் தடிப்புள்ள மடிப்புக்களே நத்தைக்குக் கால்களாகப் பிரயோசனப்படுகின்றன.

6. நீர் நத்தைக்கும்,தரை நத்தையைப்போலவே உருவ அமைப்பு உண்டு. ஆனல், அது தண்ணீரை விட்டுத் தரையில் வந்து வசிப்பதில்லை. சிறிய நீர் நிலை-களில் அது வாழ்கின்றது. தண்ணீரில் இருக்கும் அழுக்கே நீர் நத்தைகளுக்கு ஆகாரம். அவ்வாறு அவை அழுக்கைத் தின்று வருவதால், தண்ணீர் சுத்தமாகின்றது. அந்தத் தண்ணீர் மனிதனுடைய உபயோகத்திற்கு ஏற்றதாய் இருக்கின்றது.

7. பறவைகள் நத்தையின் பகை. அவை-கள் நத்தைகளைத் தம் அலகுகளால் பற்றிப் பாறை-களின்மீது மோதி உடைத்து, ஓடுகளை அகற்றி, இறைச்சியைத் தின்கின்றன. நத்தை மிகச் சிறிய பிராணியாக இருப்பினும், அதன் அமைப்பும் வாழ்க்-கையும் வியக்கத்தக்கனவாய் இருக்கின்றன.

**1. புதிய சொற்கள் :**

| | | |
|---|---|---|
| இடுக்கு | ஓய்ந்ததும் | நாள்தோறும் |
| ஸ்பரிசினிகள் | அசைவற்று | அன்ருடம் |
| நத்தை | ஒடுக்க | தடிப்புள்ள |
| பகை | பசை | தளிர் |
| குருத்து | ஏற்றது | |

### 2. கேள்விகள் :

1. நத்தைக்கு அதன் ஓடு எவ்வாறு உபயோகப்படுகிறது?
2. நத்தை எங்கே, எப்பொழுது காணப்படும்?
3. நத்தையின் உறுப்புக்களைப் பற்றி எழுது.
4. நத்தையின் இரை என்ன?
5. நீர்நத்தையைப்பற்றி எழுது.

### 3. பயிற்சி :

(1) **நத்தை தோட்டத்தைப் பாழாக்கும்.** இந்த வாக்கியத்தில் **நத்தை** என்பது எழுவாய்; **பாழாக்கும்** என்பது பயனிலை; **தோட்டத்தை** என்பது **செயப்படுபொருள்.** எழுவாயின் செய்கைக்கு உட்படும் பொருள் செயப்படுபொருள். உதாரணத்தில் நத்தை என்னும் எழுவாயின் பாழாக்கும் என்னும் செய்கைக்கு உட்படுவது தோட்டம். ஆகையால் தோட்டத்தை என்பது செயப்படுபொருள்.

(2) **கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள செயப்படுபொருள்களை எழுது:**

1. கண்ணன் புத்தகம் வாங்கினான்.
2. நத்தை தளிர்களைத் தின்னும்.
3. பறவைகள் நத்தைகளைக் கொல்லும்.

(3) **கீழ்வரும் சொற்களுக்குத் திணை, பால், எண், இடம், எழுது :**

வாய், தண்ணீரை, மனிதனுடைய, தோட்டம், முதுகு.



# 24. முகம்மதிய மன்னரும் மதியுள்ள காஜியும்

1. முன்னொரு காலத்தில் ஆப்பிரிக்காக் கண்டத்தின் வடபாகத்தில் உள்ள அல்ஜீரியா நாட்டை ஒரு முகம்மதிய மன்னர் ஆட்சிபுரிந்து வந்தார். அவர் தம் நாட்டைச் சில பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவுக்கும் நியாய விசாரணை செய்ய, ஒவ்வொரு காஜியை அமர்த்தி இருந்தார். அந்தக் காஜிகள் புத்தி கூர்மையும், நீதி நேர்மையும் நிறைந்தவர்கள். அவர்களுள் ஒருவர், மற்றவர்களைவிட அறிவில் சிறந்தவராய் விளங்கி வந்தார்.

2. மன்னரின் மனத்தில், அந்தக் காஜியின் அரிய செயலை ஆராய்ந்தறியவேண்டும் என்ற எண்ணம்

நெடுநாளாக இருந்தது. ஒருநாள் அவர் தனியே மாறு வேடம் பூண்டு, சாதாரண நகரவாசிபோல, ஓர் உயர்ந்த பரியின்மேல் ஏறிக்கொண்டு, அந்தக் காஜி இருந்த பட்டணத்தின் கோட்டை வாயிலை அடைந்-தார். அங்கே ஒரு முடப் பிச்சைக்காரன் உட்கார்ந்-திருந்தான். அவனுக்கு அரசர் ஒரு பொற்காசைக் கொடுத்தார். அரசர் சவாரி செய்துவந்த அழகிய குதிரையைக் கண்ட பிச்சைக்காரனுக்கு அதை எப்படியாயினும் அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணம் உண்டாயிற்று. எனவே, அவன் நகரக் கடைவீதி வரையில் அந்தக் குதிரையின் மேல் தன்னை ஏற்றிக்கொண்டு போகுமாறு மன்னரை வேண்டிக்கொண்டான். அவன் முடவனாய் இருந்த-படியால் நடக்க முடியாமல் சவாரி கேட்கிறான் என்று வேந்தர் நினைத்து, கருணையுடன் அவனைத் தன் குதிரையின்மீது ஏற்றிக்கொண்டு, கடைவீதியை அடைந்தார். அவ்விடத்தில் அம்முடவன் தான் இறங்காமல், மன்னரைக் குதிரையை விட்டு இறங்கிப் போகுமாறு சொன்னான்.

3. அவனுடைய மோசக் கருத்தை அறிந்த அரசர் “இந்த வழக்கைக் காஜியிடம் சொல்லி அவரு-டைய மதி நுட்பத்தை அறிவோம்,” என்று தீர்மா-னித்தார். ஆகவே, அவர் முடவனோடு சவாரி செய்து காஜியின் நீதி மன்றத்தை அடைந்தார்.

4. அந்தச் சமயத்தில் காஜியின் நியாய சபையில் இரண்டு வழக்குகள் தீர்மானத்திற்கு வந்திருந்தன. ஒரு வழக்கில், ஓர் அடிமைப் பெண்ணை ஒரு கவி-வாணரும், ஓர் உழவனும் ‘என்னடிமை, என்னடிமை’

என்று வழக்கிட்டனர். பெண்ணோ வாய் திறவாமல் இருந்தாள். காஜி, அப்பெண்ணைத் தம்முடன் நிறுத்திக்கொண்டு, இருவரையும் மறுநாள் வருமாறு கட்டளையிட்டார். இரண்டாம் வழக்கில் ஓர் எண்ணெய் வியாபாரியும், ஓர் இரும்பு வியாபாரியும் ஒரு கைப்பிடி அளவு நாணயங்களை 'என் பணம், என்பணம்' என்று வாதாடினர். காஜி, நாணயங்களை வாங்கி வைத்துக் கொண்டு, அவ்விருவரையும் மறுநாள் வருமாறு உத்தரவிட்டார்.

5. இந்த இரண்டு வழக்குகளையும் சேர்ந்தவர்கள் சென்ற பிறகு மன்னர் தம் வழக்கைக் காஜியிடம் முறையிட்டார். முடவனோ சற்றும் தயங்காமல் குதிரை தன்னுடையது என்று சாதித்தான். காஜி குதிரையைத் தம் இடம் நிறுத்திக்கொண்டு அவ்விருவரையும் மறுநாள் வருமாறு ஆணையிட்டார்.

6. மறு நாள் குறித்த காலத்தில் மூன்று கட்சிக்காரரும் வந்தனர். காஜியும் காலம் கடவாமல் நீதி மன்றத்தை அடைந்தார். முதல் கட்சிக்காரரை காஜி முதலில் அழைத்து, அடிமைப் பெண் புலவருக்கு உரியவளே என்று தீர்மானம் செய்து, அவருடன் அவளைப் போகுமாறு கட்டளை இட்டார். பிறகு இரண்டாம் கட்சிக்காரரை அழைத்துப் பணம் இரும்பு வியாபாரியினுடையது என்று தீர்ப்புச் செய்து அதை அவனிடம் அளித்து அனுப்பினர்.

7. பிறகு மூன்றும் வழக்கு விசாரணைக்கு வந்தது. காஜி தம் இருக்கையை விட்டு இறங்கி வந்து, இரண்டு வழக்காளிகளையும் வெளியே அழைத்துச் சென்றார். அங்கே பல குதிரைகள் வரிசையாய்

நின்றுகொண்டு இருந்தன. அவற்றில் வழக்குக்-குரிய குதிரையைக் காட்டும்படி இருவருக்கும் காஜி கட்டளை இட்டார். இருவரும் அந்தக் குதிரை-யைக் காட்டினர். அவர்கள் அவ்வாறு காட்டும்போது மதியுள்ள காஜி, குதிரை அரசருடையது என்று தீர்-மானித்தார். இந்தப் புத்தி நுட்பமுள்ள தீர்மானங்-களைக் கேட்ட வேந்தர், காஜியைத் தனியாகக் கண்டு, தம்மை இன்னுர் என்று தெரிவித்துக்கொண்டார். பிறகு, வழக்குகளின் உண்மைகளை எவ்விதம் காஜி தெரிந்துகொண்டார் என்று அறிய அரசர் ஆசைப்-பட்டார். அது கேட்ட காஜி, "வேந்தே, இன்று காலையில் நான் மைச்சிமிழில் சிறிது மை கொட்டு-மாறு அடிமைப் பெண்ணுக்கு உத்தரவளித்தேன். அவள் பல நாள் பழகியவள் போல மையைச் சிந்தா-மல் சிமிழில் கொட்டி வைத்தாள். ஆகவே, அவள் புலவருடைய வேலைக்காரி என்பதைத் தெரிந்து-கொண்டேன். வழக்குக்கு வந்த நாணயங்களை நீரில் போட்டுப் பார்த்தபோது, அதில் சற்றும் எண்ணெய்ப் பசை தோன்றவில்லை. ஆகையால், அவை வாணியன் பணம் அல்ல என்று கண்டுகொண்டேன். பிறகு தங்கள் வழக்கில் தாங்கள் குதிரையின் அருகில் சென்றபொழுது அது கனைத்ததையும், முடவன் சென்றபொழுது அது கனைக்காமல் இருந்ததையும் கண்டு, குதிரை தங்களுடையதே என்று தீர்மானித்-தேன்," என்று கூறினர்.

8. மன்னர் காஜியின் மதி நுட்பத்தைக் கண்டு அளவு கடந்த ஆனந்தங் கொண்டு மற்ற காஜிகள் எல்லாருக்கும் அவரைத் தலைவராக அமைத்தார்.

## 1. புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| விசாரணை | வழக்கு | கடவாமல் | நேர்மை |
| தீர்மானி | நீதிமன்றம் | மாறுவேடம் | நீதிமன்றம் |
| கட்சிக்காரன் | மோசக்கருத்து | நியாயசபை | உரியவன் |
| நகரவாசி | அடிமை | தீர்ப்பு | பொற்காசு |
| கவிவாணர் | இருக்கை | வாயில் | வழக்கிடு |
| சவாரி | நாணயங்கள் | இன்னுன் | அபகரிக்க |
| வாதாடு | மைச்சிமிழ் | கருணை | சாதித்தான் |
| வழக்காளி | | | |

## 2. கேள்விகள் :

1. காஜி என்பவர் யார் ?
2. மன்னர் முடவனுக்குச் செய்த உதவி என்ன ?
3. முடவன் கொண்ட மோசக் கருத்து என்ன ?
4. எண்ணெய் வியாபாரியின் வழக்கு யாது ?
5. உழவனுடைய வழக்கு என்ன ?
6. காஜி எவ்வாறு அரசர் வழக்கைத் தீர்த்தார் ?
7. நாணயங்கள் இரும்பு வியாபாரிக்குச் சொந்தம் என்று காஜி எவ்வாறு கண்டுபிடித்தார் ?

## 3. பயிற்சி :

**(1) எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எழுது :**

1. அல்ஜீரியா தேசத்தை ஒரு முகம்மதிய மன்னர் ஆண்டு வந்தார்.
2. காஜியின் குணத்தை அறிய மன்னர் விரும்பினுர்.
3. முடவன் மன்னரைக் குதிரையை விட்டு இறங்கச் சொன்னுன்.
4. குறித்த காலத்தில் மூன்று கட்சிக்காரர்களும் வந்தார்கள்.
5. காஜியைத் தனியாக அழைத்து மன்னர் தம்மைத் தெரிவித்துக்கொண்டார்.

(2) **ஒவ்வொரு சொல்லையும் வைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுது :**

நீதி, நேர்மை, மதி நுட்பம், கட்டளையிட்டான், முறை–யீடு, காலங்கடவாமல்.

(3) **பொருள் எழுது :** வாயில், அபகரி, கருணை, மதி–நுட்பம், தயங்காமல், காஜி.

# 25. செய்யுட் பகுதி

## வெற்றி வேற்கை

1. எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்.
2. கல்விக் கழகு கசடற மொழிதல்.
3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
4. மன்னர்க் கழகு செங்கோல் முறைமை.
5. மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்.
6. தந்திரிக் கழகு தறுகண் ஆண்மை.
7. உண்டிக் கழகு விருந்தோ டுண்ணல்.
8. அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
9. வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை.
10. தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.
11. தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழ லாகும்மே.
12. அடினும் ஆவின்பால் தன் சுவை குன்றாது.
13. சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது.
14. அரைக்கினும் சந்தனம் தன் மணம் அறாது.
15. புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது.
16. நூருண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை,
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.
17. பெருமையும் சிறுமையும் தான்தர வருமே.

18. கற்கை நன்றே, கற்கை நன்றே,
பிச்சை புகினும் கற்கை நன்றே.

19. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.

20. நாற்பால் குலத்தில் மேற்பால் ஒருவன்
கற்றிலன் ஆயின் கீழிருப்பவனே.

21. எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை 'மேல் வருக!' என்பர்.

22. அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.

23. அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.

24. நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.

25. கேளும் கிளையும் கெட்டோர்க் கில்லை.

26. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.

27. குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்.

28. சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.

29. இல்லோர் இரப்பதும் இயல்பே, இயல்பே;
இரந்தோர்க் கீவதும் உடையோர் கடனே.

—அதிவீரராம பாண்டியர்

## வாக்குண்டாம்

நன்றி யொருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல்? எனவேண்டா;—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருத லால். 1

நல்லா ரொருவருக்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே ;—அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மே லெழுத்துக்கு நேர். 2

அடுத்து முயன்றாலும் ஆகுநா ளன்றி,
எடுத்த கருமங்க ளாகா ,—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா. 3

நல்லாரைக் காண்பதுவும் நன்றே ; நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே ;—நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே ; அவரோ(டு)
இணங்கி யிருப்பதுவும் நன்று. 4

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம் ;—தொல்லுலகில்
நல்லா ரொருவர் உளரேல் அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யும் மழை. 5

—ஔவையார்

## நல்வழி

ஆறிடு மேடும் மடுவும்போ லாம்செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் ?—சோறிடும்;
தண்ணீரும் வாரும்; தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து. 1.

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம்; வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சில் பாயாது;—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும். 2.

கல்லானே ஆனாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர்;—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்;
செல்லா தவன்வாயிற் சொல். 3.

பூவாதே காய்க்கும் மரமுமுள; மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாம் உளரே;—தூவா
விரைத்தாலும் நன்ருகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலும் தோன்ரு துணர்வு. 4

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்,—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர். 5

—ஔவையார்

## விவேக சிந்தாமணி

ஒப்புடன் முகமலர்ந்தே, உபசரித் துண்மைபேசி,
உப்பில்லாக் கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும்!
முப்பழ மொடுபா லன்னம் முகங்கடுத் திடுவாராயின்,
கப்பிய பசியினேடு கடும்பசி யாகுந்தானே. 1

வாழ்வது வந்த போது மனந்தனில் மகிழ வேண்டா.
தாழ்வது வந்ததானுல் தளர்வரோ தக்கோர் ? மிக்க
ஊழ்வினை வந்ததானுல் ஒருவரால் விலக்கப்போமோ ?
ஏழையாய் இருந்தோர் பல்லக்கேறுதல் கண்டிலீரோ ? 2

வெள்ளத்தால் போகாது, வெந்தணலால் வேகாது
வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது ; கொடுத்தாலும் நிறை
வொழியக் குறைபடாது ;
கள்ளர்க்கோ மிக அரிது ; காவலோ மிக எளிது,
கல்வி என்னும்
உள்ளத்தே பொருள் இருக்க, உலகெல்லாம் பொருள்
தேடி உழல்வதேனே ? 3

## தனிப் பாடல்

பிறப்பித்தோன், வித்தைகளைப் பேணிக் கொடுத்தோன்,
சிறப்பின் உபதேசஞ் செய்தோன் ;—அறப்பெரிய
பஞ்சத்தில் அன்னம் படைத்தோன், பயம் தீர்த்தோன்
எஞ்சாப் பிதாக்களென எண். 1

வான்குருவி யின்கூடு வல்லர்க்குத் தொல்கரையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்—யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண் ;
எல்லார்க்கும் ஒவ்வொன்(று) எளிது. 2

சித்திரமும் கைப்பழக்கம் ; செந்தமிழும் நாப்பழக்கம் ;
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் ;—நித்தம்
நடையும் நடைப்பழக்கம் ;-நட்பும், தயையும்
கொடையும் பிறவிக் குணம். 3

காணுமல் வேணதெல்லாம் கத்தலாம், கற்ருேர்முன்
கோணுமல் வாய்திறக்கக் கூடாதே ;—நாணுமல்
பேச்சுப்பேச்(சு) என்னும், பெரும்பூனை வந்தக்கால்
கீச்சுக்கீச் சென்னும் கிளி. 4

கற்றதுகைம் மண்ணளவு, கல்லாதுலகள(வு) என்(று)
உற்ற கலைமடந்தை ஓதுகிருள் ;—மெத்த
வெறும்பந் தயம்கூற வேண்டா புலவீர் ;
எறும்புந்தன் கையால்எண் சாண். 5

தாயோ(டு) அறுசுவைபோம் தந்தையொடு கல்விபோம் ;
சேயோடு தான்பெற்ற செல்வம்போம் ;—ஆயவாழ்(வு)
உற்ருர் உடன்போம் உடன்பிறப்பால் தோள்வலிபோம் ;
பொற்ருலி யோ(டு) எவையும் போம். 6

# செய்யுட் பாடம்-குறிப்புரை

## வெற்றி வேற்கை

**செய்யுள் எண்**

1. இறைவன்–கடவுள்.

2. கசடு–குற்றம், அற–நீங்க.

3. செழுங்கிளை–நல்ல சுற்றத்தை, தாங்குதல்-பாதுகாத்தல்.

4. செங்கோல் முறைமை-நீதி செலுத்தும் முறைமை.

5. வரும்பொருள்-இனிவரும் காரியத்தை, உரைத்தல்-முன்னறிந்து சொல்லல்.

6. தந்திரிக்கு-படைத் தலைவனுக்கு, தறுகண்-அஞ்சாமையும், ஆண்மை-வீரமும்.

7. உண்டி–உணவு.

8. அறிவோர் –அறிவுடையோர், கற்று – (கற்கவேண்டிய நூல்களை எல்லாம்) கற்று, உணர்ந்து-(அவற்றின் பொருளை) அறிந்து, அடங்கல்–அடங்கி இருத்தல்.

**குறிப்பு :** அறிவோர் என்பதற்கு அறிஞர் என்பதும் பாடம்.

9. வறியோர் - வறுமை உடையவர், செம்மை – செம்மையுடையராதல்.

10. தேம்படு–மதுரம் பொருந்திய, திரள்–திரண்ட, வான் உற-ஆகாயத்திற் பொருந்தும்படி, ஓங்கி–உயர்ந்து.

11. தெள்ளிய-தெளிந்த, தெள்நீர்-தெளிந்த நீரை உடைய, கயத்து-குளத்தில் உள்ள, சினை-முட்டை, நுண்ணிது-சிறியது, அண்ணல்–பெருமை பொருந்திய, அணி-அலங்கரிக்கப்பட்ட, புரவி-குதிரை.

12. அடினும்–காய்ச்சினாலும், ஆவின் பால்-பசுவின் பால்.

13. ஒளி–பிரகாசம்.

14. அருது–நீங்காது.

15. கார் அகில்-கரிய அகிற்கட்டை, பொல்லாங்கு கமழாது-தீ நாற்றம் வீசாது.

16. கேண்மை-நட்பு, மூர்க்கர்-கீழ்மக்கள்.

17. தான் தர-செய்து கொள்வதால்.

18. கற்கை-கற்றல்.

19. நலம்-மேன்மை, பதர்-பதடி.

20. நாற்பால்-நான்கு வகையான, மேற்பால்-உயர் குலத்திற் பிறந்த.

21. குடி-குலம்.

22. அறிவுடை ஒருவன்-கல்வியறிவுள்ள ஒருவன்.

24. நாளும் - நட்சத்திரமும், நலிந்தோருக்கு - பிணியால் மெலிந்தோருக்கு.

25. கேளும்-நட்பும், கிளையும்-உறவும், கெட்டோருக்கு-வறுமை உடையவர்க்கு.

26. உடைமை-செல்வம், ஒருவழி-ஓரிடத்தில்.

27. குஞ்சரம் - யானை, ஊர்ந்தோர் - நடத்தியவர், நடை மெலிந்து-நடந்ததால் தளர்வுற்று, நண்ணினும் நண்ணுவர்-அடைந்தாலும் அடைவர்.

28. சிறப்பு-பிறரை ஏவும் தன்மை, அறக்கூழ்ச்சாலை-தருமத்திற்குக் கஞ்சி வார்க்கும் சத்திரம்.

29. இல்லோர்-ஏழைகள், உடையோர்-செல்வர், கடன்-கடமை.

## வாக்குண்டாம் அல்லது மூதுரை

1. நன்றி-உதவி, என வேண்டா-என்று ஐயுற வேண்டாம், நின்று-நிலைபெற்று, தளரா-சோராமல், தெங்கு-தென்னை, தாள் உண்ட-வேரினால் உட்கொண்ட.

2. உபகாரம்-உதவி, அல்லாத-நல்லவர் அல்லாத, ஈரம் இலா-அன்பு இல்லாத, நெஞ்சத்தார்க்கு-மனம் உடையவருக்கு, ஈந்த-செய்த, நேர்-ஒப்பாகும்.

3. அடுத்து முயன்றாலும்-மேலும் மேலும் முயற்சி செய்தாலும், ஆகு நாள் அன்றி-முடியுங்காலம் வந்தால் அல்லாமல், எடுத்த-மேற்கொண்ட, கருமங்கள்-காரியங்கள், தொடுத்த - கிளைத்த, பருவத்தால் அன்றி-பழுக்கும் காலம் வந்தால் அன்றி, பழா-பழுக்கமாட்டா.

4. நலம் மிக்க-பயன் நிறைந்த, உரைப்பதும்-பேசுவதும், இணங்கி இருப்பதும்-கூட இருப்பதும்.

5. ஆங்கு-அவ்விடத்தில், பொசியும்-கசிந்து ஊறும், தொல் உலகில்-பழமையாகிய உலகில்.

## நல்வழி

1. ஆறிடும்-ஆற்றினால் உண்டாக்கப்படும்; உண்ணீர்மை-மனத் தூய்மை; வீறும்-பலம் அடையும்.

2. வெட்டெனவை-கடினமான பொருள்; மெத்தெனவை-மிருதுவான பொருளை; வேழம்-யானை; கோல்-அம்பு; பஞ்சில்-பஞ்சுப் பொதியில்; இருப்புப் பாரை-இரும்பினால் செய்யப்பட்ட கடப்பாரை; பாறை-கருங்கற்பாறை; நெக்கு விடும்-பிளக்கும்.

3. இல்லான்-(பொருள்) இல்லாதவனை; இல்லாள்-மனைவி; செல்லாது-ஏற்காது.

4. ஏவாதே-செய்யும்படி சொல்லாமலே; உணர்வு-அறிவு.

5. தேவர்-திருவள்ளுவர்; மறை-வேதம்; மூவர்-தேவாரம் இயற்றிய அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவர்; கோவை-திருக்கோவையார் என்னும் நூல்; திருமூலர் சொல்-திருமந்திரமென்னும் நூல்.

## விவேக சிந்தாமணி

1. ஒப்புடன் – விருப்பத்துடன், முப்பழம் - மா, பலா வாழை.

2. தக்கோர்-அறிவுடையோர், ஊழ்வினை-பண்டை விதி.

3. வெம்தணல்-வெம்மையுள்ள நெருப்பு, உள்ளம்-மனம், உழல்வது-அலைவது.

## தனிப் பாடல்

1. பிறப்பித்தோன்-தந்தை, வித்தைதனைப் பேணிக் கொடுத்தோன்-ஆசிரியர், உபதேசம் செய்தோன்-குரு, எஞ்சாத-குறைவற்ற.

2. கரையான்-கரையான் கூடு, தேன்-தேன் கூடு, சிலம்பி-சிலந்திக்கூடு.

3. கொடை-பிறருக்குக் கொடுக்கும் குணம், பிறவிக் குணம்-இயற்கைக் குணம்.

5. கலைமடந்தை-சரசுவதி, ஓதுகிருள்-படிக்கிருள்.

6. சேய்-குழந்தை, உடன் பிறப்பு-அண்ணன் தம்பி, பொற்ருலி-பொன் தாலி கட்டிய மனைவி.

சென்னை-600 008
89929
TB 031(4) N57

THIRU· VI· KA·

# TAMIL VACHAKAM

IV STANDARD

By

P. VEERARAGHAVAN
(Editor : 'Arambakkalvi.')

ASSOCIATION PUBLISHING HOUSE
MADRAS–1.

Price As. 9] 1957 [56 Naye Paise.

Venkatesan Press, Madras–1.